

கவிஞர் செ. நாகேந்திரன்
கவிதைச் சரம்

சுஞ்சஜித்தா

Kokilam

Jeeveya

Jeevakarunya

Jeveya

# கவிதைச் சரம்



ஆசிரியர் :

கவிஞர் **செ. நாகேந்திரன்**

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை – 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 0091-44-4346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ *கவிதைச் சரம்* |
| தொகுப்பாசிரியர் | ➢ கவிஞர் செ. நாகேந்திரன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2002 |
| பதிப்பு விவரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 112 |
| நூலின் விலை | ➢ ரூ. **25.00** |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. சாய் |
| லேசர் வடிவமைப்பு | ➢ *கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர்,* சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ *ஸ்கிரிப்ட் ஆப்செட்,* சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ ***மணிமேகலைப் பிரசுரம்*** சென்னை - 17. |

# உள்ளே...


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | வாழிய வாழிய என்றே வாழ்த்திடு நெஞ்சே! | 7 |
| 2. | வாழ்க்கையில் | 10 |
| 3. | நீ | 11 |
| 4. | வானமே நினைத்துப் பார்! | 13 |
| 5. | தமிழீழப் பாலகன்! | 17 |
| 6. | வளரும் தமிழரை வந்தனம் செய்வோம்! | 20 |
| 7. | ஈழத்தமிழ் மண் | 22 |
| 8. | இரத்தினசிங்கம் ஐயாவுக்கு இதய அஞ்சலிகள் | 25 |
| 9. | பணம்! | 28 |
| 10. | அந்தநாள் வன்னி | 30 |
| 11. | உழைத்து முன்னேறு! | 32 |
| 12. | மாண்டாரும் பிழைப்பாராம் மேதினியில்! | 34 |
| 13. | தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வாழீ! வாழீ!! | 36 |
| 14. | சூரியனே பார்! பார்..! | 38 |
| 15. | யாழ் வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி வாழீ! | 40 |
| 16. | இலண்டன் தமிழ்ச் சங்கம் வாழியவே! | 45 |
| 17. | யாரிவன்?! | 49 |
| 18. | உன்னுரிமை என்றும் உன் நாட்டில்தான்! | 52 |
| 19. | பச்சைக் கிளியே! | 55 |
| 20 | புலம் பெயர்ந்த உள்ளங்களே! | 58 |
| 21. | தமிழ் வெல்க! | 61 |

# உள்ளே...


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 22. | சிந்தனை செய் மனமே | 64 |
| 23. | தமிழீழத்தில் ஒரு உலா! | 67 |
| 24. | படைத்தவன்! | 71 |
| 25. | இருட்டு! | 73 |
| 26. | நெஞ்சே வேண்டு! | 76 |
| 27. | திறமை | 77 |
| 28. | பத்துக்குப் பதினைந்து! | 78 |
| 29. | யாழ் தேவியின் குமுறல்! | 81 |
| 30. | கைத் தொலைபேசி! | 85 |
| 31. | காகம் | 88 |
| 32. | தமிழ் ஓலைகள் வாழ்க, வளர்க! | 91 |
| 33. | தீர்ப்பு | 92 |
| 34. | விடிவெள்ளி பகர்கிறது! | 95 |
| 35. | பொங்கு தமிழே! | 98 |
| 36. | தைப் பொங்கல் | 100 |
| 37. | தை | 101 |
| 38. | காலை மகள் வந்தாள்! | 102 |
| 39. | மாலை மகள் வந்தாள்! | 103 |
| 40. | தூக்கணாங்குருவி | 104 |
| 41. | ஆசைகள் | 108 |
| 42. | சிந்தித்தால் | 110 |

# என்னுரை



இலண்டனில் உள்ள பிரபலமான தாபனங்களின் ஆண்டு மலர்களிலும், புதினம், வடலி, நம் நாடு, ஈழ நாடு போன்ற பத்திரிகைகளிலும் மரைத் தென்றல் மாத சஞ்சிகையிலும் பிரசுரமான கவிதைகளுடன், தீபம் தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டுப் பாராட்டப்பட்ட கவிதைகளையும் தொகுத்து எனது இந்த ஐந்தாவது கவிதை நூலை உருவாக்கியுள்ளேன். சில கவிதைகள் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ப எழுதப்பட்டவை ஆதலால், காலம் செல்லச் செல்ல வரலாறும் மாறமாறக் கருத்துக்கள் வித்தியாசப்படலாம். ஆயினும் அவை எல்லாம் அந்தந்தக் காலகட்டத்தில் வாசகர்களால் பாராட்டப்பட்டவையே.

எனது இப்பணிக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் நண்பர்களான சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவர் பொன் பாலசுந்தரம், சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் செயலாளரும் தற்போது இலங்கை இந்துக் கலாச்சார அமைச்சின் இணைப்பாளருமான ஐ.தி. சம்பந்தமூர்த்தி, எனது கல்லூரி நண்பர் சி.சோ. ஜீவரட்ணம் (ஜீவா) ஆகிய இம்மூவரும் என்றுமே என்னால் மறக்கப்பட முடியாதவர்கள். இக்கவிதை நூலை வாசிக்கும் அன்புத் தமிழ் உள்ளங்கள் இதில் உள்ள குறை நிறைகளை என்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு மனமுவந்து அணிந்துரை தந்த பேராசிரியர் அவர்களுக்கும், நூலை அழகாகப் பிரசுரித்துத் தந்த மணிமேகலைப் பிரசுர உரிமையாளர் ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் எனது இதயங்கலந்த நன்றிகள்.

வணக்கம்

**செ. நாகேந்திரன்**


S. Nagendran
7, Greenhill Grove
Manor Park
London E 12 6BD
United Kingdom
Tel/Fax 020 8553 2190



# கவிதைச் சரம்



# வாழிய வாழிய என்றே வாழ்த்திடு தமிழ் நெஞ்சே!



உரித்தான தம் மொழியோடு
உயர்ந்தே ஓங்கும் தாபனம்
பிரித்தானியாவில் தமிழ்பேசும்
மக்களின் நிரந்தர நிறுவனம்
கலாநிதி ஆறுமுகம் சிந்தையில்
கருவுருக் கொண்டு அமைப்பாகி
காலமெல்லாந் தமிழினத்தைக்
கருத்திற் கொள்ளும் நிறுவனம்!

வாழிய வாழிய என்றே
வாழ்த்திடு தமிழ் நெஞ்சே - இதை
வாழிய வாழிய என்றே
வாழ்த்திடு தமிழ் நெஞ்சே!

எழுபத்தியேழில் உருவெடுத்து
எழிலுருக்கொண்டு வளர்ந்து வரும்
எழுச்சிமிக்க தாபனம் இது

ஏழ்மை நீக்கும் நிறுவனம்
அள்ளிக் கொடுக்கும் மனமுடைய
அங்கத்தவர்கள் பெருகி வர
உள்ளத்தா லுயர் உத்தமர்கள்
ஊழியம் ஆற்றும் நிறுவனம்!
.....வாழிய வாழிய என்றே

ஈழத்தமிழரின் விடுதலைக்கு
ஈடற்ற திட்டங்கள் தீட்டி
வாழ வைக்கவும் வகை தேட
வரமாய் வந்த நிறுவனம்
தாயக அநாதைச் சிறாருக்கும்
தவித்து வாழும் மக்களுக்கும்
நேயமுடனே நல்லுதவி
நித்தமும் செய்யும் நிறுவனம்!
....... வாழிய வாழிய என்றே

அரிய மருந்து வகையோடு
ஆகாரம் ஆடைகள் தானீந்து
உரிய கல்வியுந் தொடர்ந்திடவே
ஊக்கம் அளிக்கும் நிறுவனம்
செம்மையுற மனை திருத்தி
செய்த தொழிலையுந் தொடர்ந்து
தம்மைத் தாமே தாங்கி வரத்
தைரியங் கொடுக்கும் நிறுவனம்!
.......... வாழிய வாழிய என்றே

அமைதி அடக்கமுடன் குரலை
அகில மெங்குங் கொடுத்து
இமையாய் இனத்தைக் காக்கும்
இமயம் போன்ற நிறுவனம்
மோசமாகத் தமிழர்க்கு இழைக்கும்
மனித உரிமை மீறல்களைப்
பாசமுடனே பாரெங்கும்
பறையறைந்து தடுக்கும் நிறுவனம்!
........ வாழிய வாழிய என்றே

கலையோடு பண்பை வளர்த்து
கலாச்சாரங்களைப் பேணும்
நிலையில் தளரா நெஞ்சங்களை
நிறைவாய்க் கொண்ட நிறுவனம்
புலம் பெயர்ந்தும் இனத்துக்கு
பற்பல தொண்டுகள் புரியும்
பலம் பொருந்திய அமைப்பாய்
பாரில் துலங்கும் நிறுவனம்!
........ வாழிய வாழிய என்றே



## வாழ்க்கையில்...

ஊக்கமுடன் இளமையில் கல்லு, பின்பு
ஆக்கமுள்ள ஆலோசனை சொல்லு!
மதுபானப் பழக்கத்தைக் கொல்லு, வாழ்வில்
மெதுவாக முன்னேறிச் செல்லு!
சுத்தமுள்ள பொருளையே வில்லு, என்றும்
சத்தியத்தின் பக்கமே நில்லு!
கட்டாதே எதிரிக்குஞ் சில்லு, யாரையும்
முட்டாதே, அறிவினால் வெல்லு!
உலகத்தோடு ஒக்க ஒல்லு, நல்ல
பலதிலும் சிலதையே மெல்லு!
நக்கலுக்குச் செருப்பல்லப் பொல்லு, ஆனால்
சிக்கலுக்குள் சேர்ந்தால் மல்லு!
வேண்டாமே தில்லு முல்லு, அதனால்
பூண்டோடும் போகலாம் பல்லு!
உற்றார் உறவினராயினும், அல்லுத் தொல்லை
அற்றாருடன் நல்லுறவு கொள்ளு.

# தமிழ் நெஞ்சே வாழ்க!

'வாழ்த்திடு தமிழ் நெஞ்சே' என்று முதல் கவிதை தொடங்கி 'சிந்தித்தால்' என்ற நாற்பத்திரண்டாவது கவிதை நிறைவாகக் கவிதைச் சரம் தொடுத்த அன்புச் சகோதரர் கவிஞர் திரு. செ. நாகேந்திரனை வாயார "தமிழ் நெஞ்சே வாழ்க" என்று வாழ்த்துவோம்.

கடல் கடந்து புலம்பெயர்ந்து இலண்டனில் வாழும் என் இனிய தமிழ்ச்சகோதரர் நாகேந்திரன். மணிமேகலைப் பிரசுரமோ என் தேவகோட்டை அன்புச் சகோதரர் தமிழ்வாணனின் குடும்பத்தாரின் தமிழ்ச்சேவை நிறுவனம்! அவரின் நூலுக்கு, இவர்கள் வடிவம் தர நான் அணி(ந்துரை) சேர்ப்பது பொருத்தம்தானே! தமிழ் ஈழத்தின் கடற்கரையும், தென்னையும் பார்த்ததுமே மகிழ்ச்சி பிறக்கிறது.

எளிய இனிய நடை, உணர்ச்சிக் கொப்பளிப்பு, இடையில் ஈழத்தமிழின் இனிய சொற்கள் என்று கவிதைச்சரம் இயல்பாகக் கோர்க்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தினைச் சிந்திப்பவன் கவிஞன். வழிகாட்டுபவன் கவிஞன். அறிவுரை சொல்பவன் கவிஞன். திட்டவும் உரிமை உள்ளவன் கவிஞன்!

*"கவிஞன் யான் ஓர் காலக்கணிதம்.*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பவன்"*

என்றார் கவியரசர்.

*'சுத்தமுள்ள பொருளையே வில்லு - என்றும்*
*சத்தியத்தின் பக்கமே நில்லு'*

*(பக். 10)*

(வில்லு - வரலாமா? ''கடி சொல் இல்லை காலத்துப் படினே!'' வரலாம்).

*''யாரையும் முட்டாதே அறிவினால் வெல்லு''*

*(பக்.10)*

- நல்லயிடம்

'நீ' *''உற்றது வரும்வரை வாடு நிச்சயம்*
*உருவாகி வரும் உனக்கோர் மேடு''*

*(பக்.11)*

எவ்வளவு நம்பிக்கை!

வதிவிடமிழந்து வாழும் தமிழினத்தைப் பார் வானமே!

*''காணத்தைச் சொரிந்து கோவிலைக் கட்டியோர்*
*கும்பிட இடமின்றித் தவிப்பதைப்பார்!''*

*(பக்.14)*

''தேவனே! *நீ தேடிவர இன்னும் சுணங்குவதேன்*
*ஈழத் தமிழரைக் காக்கத் தயங்குவதேன்?''*

*(பக்.16)*

என்று கவிஞர் முறையிடுவது கேட்டுச் சற்று நல்ல பாதை பிறந்துள்ளது. நம்பிக்கை மலர்ந்துள்ளது.

உரிய காலம் வரும்போது உதிர சம்பந்தமுள்ள உறவுகள் தாய் மண்ணை நாடிவரும்போது உரிமை வாழ்வு

கண்டு மகிழும்போது தமிழீழம் காண இன்னுயிர் தந்த திலீபன் வானிலிருந்து வாழ்த்துவான் என்று படிக்கும்போது திலீபன் மட்டுமல்ல பல்லாயிரம் இனப்போர்த் தியாகிகள் அகக்கண்ணில் முன்வந்து நிற்க, புறக்கண் நீர் சொரியப் பெருமூச்சு விடுகிறோம்.

1998-இல் பிரித்தானிய நாட்டில் முதல் சைவ மாநாட்டை நடத்தி வெற்றிப்பாதை போட்ட விம்பிள்டன் ஆலயத்தலைவர் இரத்தினசிங்கம் ஐயாவுக்கு இதய அஞ்சலி செய்கிறார். (பக். 25-26)

## பணம்

*"பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே"*

*- கவியரசர்*

*"காசேதான் கடவுளப்பா"*

*- வாலி*

*"உருண்டோடிடும் பணம் காசெனும்*
*உருவமான பொருளே!"*

*- உடுமலை நாராயண கவி*

என்று பணத்தைக் குறித்துப் பலரும் பாடியுள்ளார்கள். 'பணம் விடுதூது' என்று ஒரு சிறு பிரபந்தம் உளது. அது "பிணத்தையும் கையொப்பம் பண்ணிட வைக்கும்" என்பது சரியான Satire. வணங்கும் கோயிலை வருமானமாக்கும் தணலுருவாக்கித் தேசத்தை அழிக்கும். என்பதெல்லாம் 100% சரியான கணிப்பே!"

# அந்தநாள் வன்னி

வீடுகள் மேடுகளாக, வாழ்விடங்கள் புதை குழிகளாக ஆலயங்கள், பாழ்மண்டபங்களாக, மாறிவிட்ட வேதனையைப் படம் பிடித்ததுடன், நல்லோர்களே - ''சந்திக்குச்சந்தி உண்டியல் குலுக்குவோம்.''

அற்ப சதமும் (சென்ட்) ஆறுதல் அளிக்கும் என்பது மானுட நேயம்!

''வந்தே மாதரம் - என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்'' என்ற பாரதியை விடச் சொந்த மண்ணை நேசித்தவர் உண்டா? அவன் பரம்பரையில் வந்த கவிஞர் சிலர் அப்படி நாட்டுப்பற்றுடையவர்களாகத் திகழ்கின்றனர்.

''ஈழத்தமிழ்மண்'' - பாரதியின் 'பாருக்குள்ளே நல்ல நாடு' - பாட்டுக்கிணையான கருத்துடையது. நன்றி மறவாத தமிழ்க்கவிஞர் இவர், இலண்டன் தமிழ்ச்சங்கம், யாழ் வண்ணை வைத்தீசுவரா கல்லூரி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இவற்றிற்கு வாழ்த்துக் கூறுகிறார். ''தமிழ் ஈழத்தில் ஒரு உலா'' சென்றால், ஆனையிறவு, கூவிப் பனைபழங்கள், மன்னார்க் கடல்மீன், கசுறினாக் கடற்கரைச் சவுக்கு, மட்டுவில் மாம்பழம், மயிலிட்டிச் சுறா வறுவல், சிலாவத்துறை முத்து, எல்லாவற்றையும் குறித்து அறிந்துகொள்வோம்.

*''கன்னியா வெந்நீர்க் கிணறுகள் ஆறலாம்*
*கண்ணா நான் கொண்ட காதல் ஆறாது''*

என்று முத்தாய்ப்பு வைக்கிறாள் காதலி. அழகுதான்!

## கருணைக் கவிஞர்

கவிமனம் எப்போதும் குழந்தை மனம்தான். அன்பு மனம்தான். அறிவு மனம்தான். கருணை மனம்தான்; இவை இருக்கும்வரை கவிதைக்கு அஸ்தமனம் கிடையாது. மானுடநேயம் என்ற மனிதாபிமானம் நாகேந்திரன் அவர்களுக்கு அதிகம்.

''படைத்தவன்'' தான் படைத்தவற்றைப் பட்சமற்று மோதவிட்டுப் பார்க்கின்றானே என்ற ஆதங்கம்! யுத்தத்தால் உலகை அழித்துவருகிறானே என வருந்தும் வருத்தம்! கொடுத்துதவ மனமின்றித் தன்னலம் கருதி வாழ்பவர் மனம் ''இருட்டு'' என்பதை அழுத்தமாகச் சொல்கிறார்.

''ஆசைகள்'' பல கோடி இருக்கலாம். ஆனால் அடுத்தோரை அது தாக்கினால் தகுமோ! என்பது நியாயமான கேள்வி!

''தூக்கணாங்குருவி'' தன்னைப்பற்றியா பாடுகிறது? நம்மைக் குத்திக் காட்டுகிறதே!

## சொல்நயம்; பொருள் அழகு!

''தை'' கவிதை, அதைத் தைமகளோ, அத்தை மகளோ படித்தால் தைதை என்று ஆடுவதை, தமிழ் பாடுவதை இவர் எழுதியதை நான் படித்ததை உங்களிடம் சொல்லத்தானே வேண்டும்!

‘‘விடிவெள்ளி’’ - தலைப்பு இயற்கைப் புனைவோ என்று பார்த்தால், இல்லை! இனமானப் போராளிகளின் அளப்பரும் தியாகங்களை நினைவுபடுத்தும் உணர்ச்சிக்கவிதை!

‘‘தீர்ப்பு!’’ - நெறிமாறும் இளைஞர் யுவதிகளுக்கு எச்சரிக்கை; விழிப்பு!

‘‘பத்துக்குப் பதினைந்து’’ - இன்றைய சனநாயகத் தேர்தல்களில் நடக்கும் நிதர்சனமான காட்சி!

‘‘யாழ் தேவி’’ இனிமேல் அழாமல் புதுப்பொலிவு பெற்று ஓடுவாள்! நம்புவோம்!

‘‘கைத்தொலைபேசி’’ அருமையான கவிதை.

‘‘காகம்’’ பார்த்து, படித்து மனித இனம் பாடம் கற்றுக் கொள்ளட்டும்.

‘பட்சி ஜாதி நீங்க - இந்தப் பகுத்தறிவாளரைப் பார்க்காதீங்க -

பட்சமாயிருங்க, பகுத்துண்டு வாழுங்க.

பழக்கத்தை மாத்தா தீங்க -’

என்றார் உடுமலைக் கவிராயர். இவரோ காகத்தைப் பாருங்கள். படியுங்கள் என்று சொல்லாமல் சொல்கிறார்.

‘‘கிளி!’’ நீ எமக்கோர் சீட்டு எடுத்தே கச்சிதமாய்க் கூறுவாயோ சோசியமே!

‘‘புலம்பெயர்ந்த உங்களுக்கு ஓர் வாழ்விலையோ?’’

என்று தாபத்துடன் கேட்கிறார். ‘‘உண்டு. நல்ல காலம் வருகுது’’ என்று கிளி மட்டுமல்ல நாமும் பதில் சொல்வோம்!

‘‘யாரிவன்?’’ புலம்பெயர்ந்த ஈழத்தமிழரில் சிலரின் ஈனங்களைப் பிட்டுப்பிட்டு வைத்த கவிதை. ‘‘சத்தியமாய் யாரும் திருந்தப் போவதில்லை’’ - என்று ஏன் தனக்குள் சலித்துக் கொள்கிறீர் சகோதரரே!

உங்கள் பேனாவின் ஒவ்வொரு துளி மையும் பாரதியின் கவிதைக்கனல் போல, விடுதலை உணர்வு, இனப்பற்று, நன்னடத்தை இவற்றை ஊதி வளர்க்குமே!

## ‘‘நிறைவாக...’’

ஒரு அச்சுப்பிழை கூட இல்லாத நூல். ஆடை நெய்த மணிமேகலைப் பிரசுரம் போற்றற்குரியது. கவிதைகளுக்கு ஏற்ற அரிய படங்கள் தந்த ஓவியரின் கற்பனைக்கு வாழ்த்து. இது திரு. நாகேந்திரனின் ஐந்தாவது கவிதைத்தொகுப்பு!

கவிஞரே! ஐயாயிரம் தருக! வாழ்க! வளர்க! ‘‘விடுதலை பூபாளம்’’ பாடத்தயாராகுங்கள்!

*சரசுவதி இராமநாதன்*

## இந்நூலாசிரியரின்

## இதர நூல்கள்!

1. இலண்டன் லூசியம் சிவன்கோயில் கீர்த்தனைகள் 11.00
2. உணர்வுகள் - (கவிதைகள்) 30.00
3. ஆத்ம அலைகள் - (பக்தி பாடல்கள்) 20.00
4. இயேசுபிரான் பற்றிய சுவையான கவிதைகள் 18.00

# நீ



முன்னேற்றப் பாதைகளைத் தேடு, உன்னால்
முடியாத கருமங்களை மூடு!
கல்வியைக் கற்க எடு ஏடு, அதைக்
கற்றறிய, மதிக்குமுன்னை நாடு!
உலகத்தோடு ஒத்து ஓடு, உனது
உரிமைகளைக் கைவிட்டால் கேடு!
கள்வனுக்குப் போடிரும்புச் சூடு! அவனைக்
கண்ணியவானாக்கும் அந்தக் கோடு!!
உற்றது வரும்வரை வாடு; நிச்சயம்
உருவாகி வருமுனக்கோர் மேடு!
மழை வரக் காப்பாற்று காடு, உனது
மங்களம் சிறப்பாக்கத் தேடு வீடு!
சத்துள்ள பால்தர வளர்பசுமாடு, உன்

சீரணம் சீராக்க உண் வெள்ளைப் பூடு!
நல்லவற்றை என்றுமே நாடு, உனக்கு
நஞ்சு உரைப்போரைச் சற்றே சாடு!
சுத்தம்பேணு அன்றி வரும் பீடு, அந்தச்
சுத்தம் வரப் படு கொஞ்சம் பாடு!
கைப்பிடித்தவரோடு சற்று ஊடு, அதனால்
காதல் வளரும் பின் கூடு!
உன் மண்ணைக் கேளுரித் தோடு, மறுத்து
உறுத்தினால் சண்டை நீ போடு!
ஆண்டவனைத் துதித்து நீ ஆடு, வாழ்வில்
அவன் அன்புக்கு நிகரேது ஈடு!



# வானமே நினைத்துப் பார்

தானமே சிறப்பென தமர்க்கு ஆற்றி
துயரற்றுத் தொழுது வாழ்ந்த இனம்
மானமே பெரிதென மனத்திலேந்தி
மாபெரும் மக்கள் கூட்டமாக
கானமே கதியென எண்ணியன்று
கலங்குற்று நடந்து சென்றார்காண்
வானமே கரையாய் வதிவிடமிழந்து
வாழும் தமிழ் இனத்தினைப் பாராய்!

கல்விக்கும் கலைக்கும் மதிப்பளித்து
கருணைக் கடலாய் வாழ்ந்த மக்கள்
நல்வித்தை களிலும் புகழ்பெற்று
நாதத் தமிழும் ஆர்த்த மக்கள்
சொல்வீச்சுக் களால் சிதறி யோடி
சீரையும் சிறப்பையும் இழந்தனரே
தொல்வினையோ இதுதொடும் பழியோ -படும்
துன்பத்தை எண்ணிப் பாராய்!

வானத்தில் விந்தனைக் காட்டிய மக்கள்
வானத்தின் கீழே உறைவதைப் பார்!
பேணத் தகுந்த பண்புடன் வாழ்ந்தோர்
புனிதத்தை விட்ட பரிதாபம் பார்!
*காணத்தைச் சொரிந்து கோவிலைக் கட்டியோர்
கும்பிட இடமின்றித் தவிப்பதைப் பார்!
நாணத்தில் கோணிய பருவத்து மாதர்
நலிவுற்று மெலிவுற்று நெகிழ்வதைப் பார்!

கூழுக்குக் கைவந்த குலமாதரெல்லாம்
குடிக்க நீரின்றித் தவிப்பதைப் பார்!
நாளுக்கும் திதிக்கும் அருச்சினை செய்தோர்
நாடற்று நலமற்று அலைவதைப் பார்!
ஆளும் இனத்தின் கொடுமை ஐயா - இது
அதிகார வெறியின் கோலம் ஐயா!
நீளும் பகைவெறி நின்றிடுமா? - அன்றி
நீசரின் ஆட்சிதான் நிலைத்திடுமா!

எட்டுத்திசையும் ஏகப்புகழ் பெற்ற
எண்ணற்ற இலக்கியம் ஆர்த்தனர்
எட்டாத வானக் கிரகம் எல்லாம்
ஏகற்ற முறைதனில் கணித்தனர்

*காணம் = பொன்

கோட்டையைக் கட்டினர் நல்லூரில்
கொத்தளம் அமைத்தனர் நாற்புறம்
வீட்டையும் வினையையும் மறந்துவிட்டு-இன்று
வானமே கூரையாய் வாழ்வதைப் பார்!

விரதங்கள் விரும்பி ஆற்றிய மக்கள்
வருங்கால முணர்ந்து தேடிய மாந்தர்
பரதக்கலையிலும் புகழ் பெற்ற மக்கள்
பாரத தேசத்தை மதித்திட்ட மாந்தர்
அரவத்தின் விஷத்தையும் அடக்கிய மக்கள்
ஆச்சிரமங்களை ஆக்கிய மாந்தர்
பருவத்தில் பயிராற்றிப் பலன்பெற்ற மக்கள்
பாதகராட்சியில் மடிவதைப் பார்!

பாண்டவர் வனவாசம் சென்றதால்
பாரதப் போர் ஒன்று உருவாச்சு!
மூண்ட பகை முற்றி நடந்த தென்ன
முடிவில் அழிந்தது பாதகரே!
ஆண்ட இனமான ஈழத்தமிழரை - அரசு
அடிமையாய் நினைப்பது அறிவீனம்
பூண்ட உறுதிக்கோர் முடிவு வரும்
பூரண வெற்றி மலர்ந்து வரும்!

உத்தமரின் கீதங்கள் அழிந்ததில்லை
உரித்தான நேரத்தில் உயர்வு தரும்
செத்தவர் பெயர்களும் சிறப்புப் பெறும்
சேர்ந்த எம்மினத்துக்காய் மரித்திருந்தால்

வத்தாது செல்வம் வார்கடல் போல்
வாடும் இனத்துக்கும் இட்டு வாழ்ந்தால்!
முத்தாகத் தெரியும் வானத்தின் கீழ்
மிளிரும் தமிழீழம் மலர்ந்து விட்டால்!

காட்டிக் கொடுப்போர்க்கு மதிபுகட்டி
குரலொன்றாய் தமிழர் ஆகிவிட்டால்
நட்புற வாடிச் சலுகைக் கலைவோர்கள்
உள்ளத்தில் உண்மையைத் தெளிந்துவிட்டால்
நெட்ட நெடுவானின் கட்டிவிட்டால்
நேசத் தமிழினம் ஒன்றுபட்டால்
கிட்டி வரும் தமிழீழம் ஐயமேன் - நாம்
பட்ட துயரங்களும் பறந்துவிடும்.

அடிமையாய் எகிப்தில் வாழ்ந்தவர்க்காய் - தேவன்
ஆழ்கடல் பிரித்து வழிதிறந்தார்!
விடிவற்று வாழ்ந்த வானவர்க்காய் - அன்று
வேலோடு வந்ததும் தேவனன்றோ!
வாடி வதங்கிடும் வேளையெல்லாம் - மாந்தர்க்கு
வாழ்வைக் கொடுத்திடும் தேவனே - நீ
தேடிவர இன்னும் சுணங்குவதேன்? ஈழத்
தமிழரைக் காக்கத் தயங்குவதேன்!



# தமிழீழப் பாலகன்!

போரை விட்டுப் பயந்தென்றும்
பணிந்திடமாட்டோம்
புரிந்து கொள்ளுங்காலம்
வரும் தெரிந்துகொள்ளுங்கள்!

தாரைவார்த்துத் தமிழ் நிலத்தைக்
கொடுத்திடுவோமா?
தரணியில் நாம் தலைநிமிர்ந்து
நிற்பதில்லையா?!

ஆரையுமே நம்பிநாங்கள்
வாழ்ந்ததுமில்லை!
அன்னியரைத் தோள்கொடுக்கக்
கேட்டதுமில்லை!

கூரையின்றிப் படுத்துறங்கினாலும்
நாங்கள்
கன்னித் தமிழீழம் ஒன்றைக்
கட்டிமுடிப்போம்!

ஏரைப்பூட்டி நாமுழுத
நிலத்தை யெல்லாம்
ஏற்றபடி புதுமுறையில்
பண்ணையாக்குவோம்!

பாரைமீனும் சுரை மீனும்
நாங்கள் அள்ளியே
பாரெங்கும் வாணிபங்கள்
புரிந்து கொள்ளுவோம்!

கீரைவகை கூலவகை
நாங்கள் நாட்டிலேயே,
கனிவான பழங்களுடன்
ஏற்றி மகிழுவோம்!

வேரைக் கொண்ட வைத்தியமே
நாங்கள் வளர்த்தே,
விஞ்ஞான ஆய்விலும்
முதன்மையடைவோம்!

பேரையும் புகழையும்
பாரில் நாட்டியே,
பெரியதான உற்பத்திகள்
நாங்களாக்குவோம்!

சீரைக்கண்டு உலகமெங்கும்
வியந்தே நிற்க
சதிகாரர் பகையாளர்
சோர்ந்து மடிவர்!

ஊரைவிட்டு ஓடிப்போன
உதிரமக்களே!
உரியகாலம் வரும்போது
தேடிவாருங்கள்!

நீரைக்கூட அருந்தாது
நமக்காய் பனித்த
நேசமிகு திலீபன்
வானிற் கண்டுகளிப்பான்!

# வளரும் தமிழரை வந்தனம் செய்வோம்!



செந்தமிழ் சிறுவர் சீருடன் சிறப்பாய்
 சிரித்தே என்றும் சுகம் பெற்று
பைந்தமிழ் கற்று பல்கலை கற்று
 பண்புடன் பாரில் பரபரப்பாய்
குந்தக மற்றுக் கைத்தொழில் கற்று
 கடற்றொழில் கமத்தொழில் பலகற்றே
இந்திரலோகத்து இனியநல் வாழ்வை - தமிழ்
 ஈழத்தில் பெற்று உயர்ந்திடவே!

சுந்தரத் தமிழில் சிந்துகள் பாடியே
 செழிப்புட னென்றும் சோர்வற்று
நந்தவனம் போல் நெஞ்சத்தி லென்றும்
 நன்னெறி நேர்மை தழைத்தோங்க
சந்திர வதனச் சிறுமிய ரெல்லாம்
 செந்தமிழ் வாழ்க்கை யின்பத்திலே
ஏந்திய கரங்களில் இனிய பண்டங்கள்
 என்றுங் குறையாப் பொலிந்திடவே!

எந்திரம் போலென்றும் சுறுசுறுப்பாய்
ஏழைக்கு முதவும் எரிகதிராய்
சிந்தனைச் செறிவும் பத்தியும் மேவ
சத்தியம் காக்கும் சீலர்களாய்
தந்திர வாழ்வைத் தகர்த் தெறிந்து
தமிழையும் மண்ணையும் காப்பாற்றி
வையகம் போற்ற வாழ்ந்திடவே!

கேந்திர நாட்டில் கண்ணியம் மிக்க
கொள்கையின் சுடரொளியாய்
வெந்திறல் வேங்கையின் வீரம் மேவ
வாழ்விலென்றும் அச்சமற்று
சொந்த நிலத்தைத் தாமே ஆண்டு
சாதனை உலகில் புரிந்திடவே
வந்தனம் செய்திடுவோம் வளரும் தமிழர்க்காய்,
வல்லதேவனை வந்தனம் செய்திடுவோம்!



# ஈழத்தமிழ் மண்

கற்ற மக்கள் வாழுமிடம்
கற்றவர்தமை மதிக்குமிடம்
பெற்றவர்களைத் துதித்து
மகிழும் பாசமுளோர் உள்ளஇடம்
பற்று நேசம் பரிவுமிகுந்த
சொந்த பந்தம் கூடுமிடம்
சுற்றம் பிரிந்து போனாலும்
சுதந்திர தாகமுள்ளதெம் தமிழீழம்!

பட்டினிபோட்டு வதைத்தாலும்
படுகொலை செய்து குவித்தாலும்
கட்டிய மனைகளை அழித்தாலும்
கடும் வேதனையைக் கொடுத்தாலும்
தட்டிக் கேட்க ஆளின்றித்
தரணியே கைவிட்டாலும்
கட்டிக்காத்து மண்போற்றும்
மக்களைக் கொண்டதெம் தமிழீழம்!

முக்கனிச்சாறு ஓடுமிடம்
முதிர்ந்த வித்துக்கள் குவியுமிடம்
முக்கரையெங்குங் கடல்வளமும்
முதிர்ந்து செறிந்த வனவளமும்
திக்கெட்டு மிருந்து நிதிவரவும்
தின்னச்சலிக்காப் பண்டங்களும்
மிகச் செழிப்பான மண்வளமுங்
கொண்டதெங்கள் தமிழீழம்!

கர்ம வீரரைச் சேர்த்துக்
கலங்கா யுத்தம் புரிந்து
நிர்மலமாக்கி எதிரிகளின்
கோட்டை கொத்தளம் அழித்து
மர்மமாகச் சாதனை செய்து
சரித்திரத்தை மாற்றி
தர்மத்தாயின் பக்கம்
நிற்பதெங்கள் தமிழீழம்!

தித்திக்கச் செந்தமிழ் பேசுமிடம்
சத்தியம்காப்போர் வாழுமிடம்
வித்தகக் கலைஞர் வளருமிடம்
வேங்கைக் கொடிகள் ஏறுமிடம்
உத்தமத் தலைவன் பிறந்த இடம்
உலகமதிப்பைப் பெற்ற இடம்
நித்தமுஞ் செல்வங் கொழிக்குமிடம்
நற்திறனுள்ள தமிழீழம்!

வீறுடைய நற்படிப்பு
வீரம் நிறைந்த பாதுகாப்பு
பேறுடைய அருங்கலைகள்
பெருமைதரும் இயற்கைவளம்
கூறும் வகைத் தொழில் வசதி
கும்பிட அருந்தலங்கள்
வேறுபல குணாதிசயங்கள்
கொண்டதெங்கள் தமிழீழம்!

சிம்மாசனத்தில் தமிழ்மணம் வீச
சீருஞ்சிறப்பும் பெருகிவிளங்க
நிம்மதியாய் மக்களையாக்கி
நூதனமாய் வினைத்திறன் புகட்டி
வெம்பகையின்றி வேதனையின்றி
பன்னெடுங்காலம் தமிழ் நிலமெங்கும்
தம்மைத்தாமே சிறப்புற ஆண்டு
வந்ததெங்கள் தமிழீழம்!

அருமையான சோதிட வாகட
அறிவியல்சேர் நூல்களையீந்து
உருப்படியான கல்வியை ஊட்டி
உலகமெங்கும் மகான்களை அனுப்பி
வருங்காலச் சிறாரின் சுபிட்சத்துக்காக
பெருங்கருவான திட்டங்கள் தீட்டி
ஒருகுடைக் கீழே தமிழினமாக
வாழ்வதெங்கள் தமிழீழமே!



# இரத்தினசிங்கம் ஐயாவுக்கு இதய அஞ்சலிகள்!

பெற்ற பொன்னாட்டிற் பேரறிவூட்டித்தான்
உற்ற சீமையில் சைவத்தை நாட்டி
நற்றமிழ் மாந்தர்க்கு நல்வழி காட்டிப்
பற்றைத் துறந்த பெருந்தகைக்கு அஞ்சலிகள்!

இலண்டனில் முதற்சைவ ஆலயம் அமைத்துஇக்
கண்டத்திற் சைவ மக்களும் உண்டெனப்பூ
மண்டலமெங்கும் பெருமையைத் தந்தநற்
தொண்டாலுயர்ந்த அமரனுக்கு அஞ்சலிகள்!

அனைத்துப் பிரித்தானியச் சைவாலயத்தையும்
இணைத்து ஒன்றியம் ஆக்க வாழ்வில்
நினைத்து முடித்ததன் தலைமையும் ஏற்ற
வினைத்திறன் மிக்க வீரனுக்கு அஞ்சலிகள்!

தூங்கா துழைத்துத் தைரியத் துடனே
மங்களமாக முதற்சைவ மாநாட்டை
ஆங்கில நாட்டிற் சிறப்புடன் நடத்தி
நீங்காப் புகழ்பெற்ற அண்ணலுக்கு அஞ்சலிகள்!

ஈடு கொடுத்திளந் தாபனங்கள் வளர்த்து
ஈட்டிய செல்வத்தை ஈவிரக் கத்துக்கும்
ஈடேற்ற வழிக்கும் ஈந்தே மகிழ்ந்த
ஈடற்ற ஈழச் செம்மலுக்கு அஞ்சலிகள்!

ஈழத்தில் அகதிகளாய் இன்னலுறுந் தமிழருக்கு
நீள நினைந்து நெஞ்சுருகித் தன் வாழ்வில்
மீள வாழ்விக்க வேண்டுவன பலபுரிந்த
ஆழப் பெருந்தர்மக் கடலுக்கு அஞ்சலிகள்!


கொஞ்சுந் தமிழை லண்டனில் வளர்த்துக்
குஞ்சரத் தானுக்குந் திருக்கோவில் அமைத்து
தஞ்சமென வந்த தொண்டரையும் கலைஞரையும்
அஞ்சாமற் தாங்கிய வள்ளலுக்கு அஞ்சலிகள்!

கண்ணியங் கம்பீரம் காருண்ய மனத்துடன்
எண்ணிய புரியும் ஆற்றலும் பெற்றுலகின்
புண்ணிய பூமியெனும் பாரத நாட்டு
மண்ணிலுடல் விட்ட ஐயனுக்கு அஞ்சலிகள்!

போதனையாளராய்ப் பலர் போற்றும் பெருமகனாய்
சோதனைவரினும் சோர்வற்றுத் தன்பணியிற்
சாதனை படைத்துச் சைவம் வளர்த்துச்சிவ
நாதனை நண்ணிய அன்பனுக்கு அஞ்சலிகள்!

உத்தம குணத்தோடு உயரிய பண்போடு
சத்தியந்தவறாச் சைவத்தின் காவலனாய்
நித்திய தானம் நெஞ்சார வழங்கிய
இரத்தினசிங்கம் ஐயாவுக்கிதய அஞ்சலிகள்!

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!*



# பணம்

இணங்க மறுத்து
இனங்களைப் பிரிக்கும்!
கணப் பொழுதில்
கருணையைப் பறிக்கும்!
உணவைப் பதுக்கி
உயிர்களை வதைக்கும்!
சுணங்க வைத்துச்
செய்வன தடுக்கும்!

பிணத்தையும் கையொப்பம்
பண்ணிட வைக்கும்!
குணங்களை மாற்றிக்
கொடுமைகள் செய்யும்!
தணலுரு வாக்கித்
தேசத்தை அழிக்கும்!
வணங்கும் கோயிலை
வருமான மாக்கும்!

மணவினை மறுத்து
மாங்கல்யம் தடுக்கும்!
திணறிடுந் திருடனைத்
துணிந்திட வைக்கும்!
பணம் பணம் பணம்
பாரிற்பலதும் செய்யும்!
பணம் பணம் பணம்
சீரழித்திடுமே மனிதரையும்!

●



# அந்த நாள் வன்னி!

பெய்யும் மழையால் புலம்பெயரும் குடும்பங்கள்
உய்ய வழியின்றி உயிர்விடும் மக்கள்!
வீடுவாசல்கள் வெள்ளத்தால் அழியும்
காடுமேடெலாங் கனல்கக்கும் குண்டுகளால்!
கட்டிடமெல்லாம் குண்டினால் தகர்ந்திடவே
ஒட்டியதுணியுடன் ஓடுகிறார் மக்களே!

உண்ண உணவில்லை உடுக்க உடையில்லை
மண்ணின் மாண்பெல்லாம் மாண்டே போனதந்தோ!
பிணிக்கு மருந்தில்லை படுக்கப் பாயில்லை
பணிக்கு வருவோர்க்கு பண்டங்கள் எதுவுமில்லை!
நித்தமு மங்கே துப்பாக்கி வேட்டுக்கள்
பத்துமாதமாய் நிவாரணத் தடைகள்!

விதவைகளான பெண்கள்தாம் எத்தனை
வீழ்ந்து மடிந்த யிளைஞர்தா மெத்தனை!
மழலையின் பசியைத் தாங்காது வெம்பி
மரித்த குடும்பம்தாம் எத்தனையெத்தனை!

பசியின் கொடுமையால் அல்லிக் கிழங்கை
புசித்து மரித்தாள் சுப்பையா சின்னம்மா!
பதினெட்டு வயது மங்கை ரேணுகாவும்
கதிகெட்டு அதையே உண்டு இறந்தாள்!
வைத்தியசாலை அவலங்கள் அனந்தம்
வைத்தியமற்று இறப்போர் அனேகம்!
கால்நடைச் சாவுகள் எத்தனை யெத்தனை
பால்குடிக் குழந்தையின் மரணம்தான் எத்தனை!

சோதனைக்குமேல் சோதனை அங்கே
வேதனைக்கு மேல் வேதனை அங்கே
சிந்தித்து நல்லோரெல்லாம் செயற்பட வாருங்கள்!
சந்திக்குச் சந்தி உண்டியல் குலுக்குவோம்
அற்ப சதங்களும் ஆறுதல் அளிக்கும்!
சொற்பமாகிலும் சகலரும் கொடுப்போம்
பாரிய யுத்தத்தின் பலனாக வந்தோம்
வேரிடும் இன்னலை அங்குநாம் களைவோம்
அள்ளிக் கொடுத்தாலும் கிள்ளிக் கொடுத்தாலும்
உள்ளத்திலிருந்து உருக்கமுடன் கொடுப்போம்!



# உழைத்து முன்னேறு!

கோடியில் ஒருவன் ஆக எண்ணி
கும்பிட்டு அதிர்ஷ்டச் சீட்டெடுத்து
பேடித்தனமாய் வாழலாமா?
பெருமதிப்பென்று எண்ணலாமா?
தேடி யுழைத்த சம்பளத்தில் - சிலர்
தொகை தொகையாய் எடுக்கின்றார்
கூடிப் பங்கு கொண்டும் எடுத்துப் - பின்
குடிமுழுகிப் போச்சென்றே கலங்கலாமா?!

பொருளும் பணமும் தேவைதான் - அவை
பெரிய அளவில் கிடைத்தால் - ஆணவ
இருள் வந்து மூடி வாழ்க்கையில்
இல்லாததை யெல்லாம் செய்யத் தூண்டுமே!
மருட்டும் தீய வழிகளில் செலவிட்டு;
மதிகெட்ட போக்கில் நடக்க வைத்து
அருளைப் பறித்து நோய்வாய்ப்படுத்தி
ஆபத்தில் நிச்சயம் சேர்த்துவிடும்!

போர்வையில் உத்தமராய் நடித்துப் - பலர்
பெருங்களவு செய்திடவே உழைக்கின்றார்!
சோர்வைநீக்கி உண்மையாய் உழைக்க - சிலர்
சோம்பற்பட்டும் திரிகின்றார்!
பார்வை இழந்தோரும் உழைக்கின்றார் - இதைப்
பார்த்தும் புரியவில்லை பச்சோந்திக் கும்பலுக்கே!
வேர்வை சிந்தியே உழையுங்கள் - இது
விவிலிய வேதத்தின் அறிவுறுத்தல்!

உழைப்பால் உலகில் உயர்ந்தவர் கோடி
ஊக்கத்தால் உயர்ந்து வாழ்பவர் கோடி!
களைப்பேயற்றுக் காலம் முழுவதும்
கண்ணியமாகக் கழிப்பவர் கோடி!
விளையும் பொருட்களை விருப்போடு ஏற்று
வையத்தைச் சிறப்புறச் செய்வோர் கோடி!
மழைபோல் எவர்க்கும் வாரி வழங்கி
மண்ணில் வாழ்பவர் எண்ணிடில் குறைவே!

●



# மாண்டாரும் பிழைப்பாராம் மேதினியில்!

விஞ்ஞானம் வளர்ந்து வையகமேயின்று
விதம் விதமாய்ச் சுருங்கியதால்
மெஞ்ஞானம் கூறும் மாபோதனையெல்லாம்
மனதிற் கொள்ளா மனுசக்தி பெரிதென
எஞ்ஞான்றுமில்லா எண்ணக் கருத்துடனே
எந்திரத்தால் உலகை யாள்வோர்
அஞ்ஞானமுமில்லை அறியாமையுமில்லையே
ஆசைக்குரிய மொழியுமில்லை;

ஆண்டாண்டு தோறும் அழுது புலம்பாமல்
அழியாது சிதைகளை விரும்பிச் சேகரித்தால்
மாண்டாரும் ஒருநாள் மாண்புறு மேதினியில்
மகிழ்ந்து நிச்சயம் குதூகலமாய்
மீண்டும் பிழைப்பார் மனக்கவலை யேன்?
முடியுமே யென்கிறார் மூதறிவு மேதையரோ!
வேண்டச் செயல்புரியும் நம்பிடவோ? விந்தையிதோ,
வாழ்வோரேயறிவார் வேளை வருங்கால்!


மூடியே வைத்த சடலங்களை யன்னாள்
மீழ் பிழைக்க வைத்த மெய்சிலிர்ப்பு புதிர்க்கதைகள்
கோடியில் சிலருக்கே வாய்த்ததென்றும்
கடவுளின் அருளே அது என்றும்
தேடியறிந்தோம் நம் வேதங்களில் கற்ற
திருமுறைக் கல்வியும் அதையுரைக்க

நாடியே சென்று வங்கி போல் மொய்த்து
நலமுடன் சிதைகளை வைப்பும் வைத்து
அல்லும் பகலுமாய் ஆயிரம் ஆண்டுக்கு மேல்
அன்புக்குரியோரின் வரவை எதிர்பார்த்தல்
வெல்லும் செயலோ வீணரின் விளம்பரமோ
வர்த்தகத்தில் தானுமிது வகையான சூத்திரமோ!

சொல்லும் செயலும் யதார்த்தமாய்ப் புரியும்
சோம்பலில்லா விஞ்ஞானச் செயல்கள்
கொல்லும் தொழிலுக்குத் தடைதான் வைத்தாலும்
குற்றுயிர் ஒன்றை உருவாக்க முடிந்திடுமோ!

●

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வாழி! வாழி!!




வாடும் பயிருக்கு உயிரூட்டும் மழைபோல் - தவித்துத்
தேடும் குழந்தைக்காம் இனியதோர் அன்னைபோல் - எங்கள்
தாய்நாட்டுமக்களை தருணத்தில் காக்கும் மரக்கலமே!
வாய்த்த அரும்பெரும் வான்புகழ்க் கழகமாய் - இன்று
கிளைபல கொண்டு பாரெங்கும் படர்ந்து - நடந்திடும்
போட்டிகளில் தமிழர் பங்கினை ஈட்டித் தந்துமே-அவர்கள்
ஈட்டிய வெற்றியாவும் இனத்தவர் பெருமைக்காக்கி - மேலும்
சுளை சுளையாம் தொண்டுகளைச் சுறுசுறுப்புடனாற்றி தினமும்
வீடுவீடாய் உண்டியலும் குலுக்கியுமே தமிழர் வாழ்
நாடுநாடாய் நிகழ்ச்சி பல நடத்தியுமே - இயன்றளவு
நிதிக்குவியல் நேர்மையாம் வழிதனில் திரட்டியுமே - துன்புற்று

வதியுநம் தாயக மக்களுக்கே - அவசியமாம்
உணவுடை மருந்தும் உடனே கொடுத்து - ஊரூராய்
பணந்தரு தொழில்களைப் பாடுடனே ஊக்கியும் - அழிந்த
பாடசாலைகளுமே மறுசீரமைத்து மற்றும் - இடிந்த
மாடங்கள் மனைகளைத் திருத்தியமைத்தும் - சிறுசிறு
குடிசை ஆங்காங்கே குறியாய் நின்றமைத்துமே - கைவிட்ட
குடிசைத் தொழில் செய முதலீந்தும் - நாட்டில்
தோட்டம் வயல்களைப் பயிரிட உதவியும் - புதிய
நாட்டங்களுக்கு நற்கரங் கொடுத்தும் - ஊனம்
உற்றுத் தவிக்கும் உடன்பிறவாமக்கள் தாங்கியும் - தவமுடனே
பெற்ற பிள்ளைதமை யிழந்தோரை அனைத்தும் -இனத்தில்
காணாது போன உறவுகளைத் தேற்றியும்- சுத்தம்
பேணாவிடங்களைச் சீராக்கம் செய்தும் - இன்னும்
எஞ்சிய உறவுகளின் இடர்களைக் களைந்தும் - வாழ்வில்
அஞ்சிய மக்களை அன்புடன் அணைத்தும் - தமிழ்க்
கலை கலாச்சாரம் பண்புகள் பேணி - நிலமிசை
நிலையாய் நின்று நித்தியப் பணியாற்றும் - பெருந்தகை
தன்னலமற்ற தொண்டரைப் பெருக்கி -சேவையால்
பன்னாட்டிலும் வாழும் தமிழரை யிணைத்து - இவ்விதமே
பொன்னேட்டில் பொறிக்கத்தகு புண்ணியம் நல்கிடும் - வான்புகழ்
வளரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
வாழிய வாழிய பல்லாண்டுகள் வாழியவே!

●

# சூரியனே பார்!.... பார்!



தனவந்தர் ஏழையென்று மனதில் எண்ணா
இனமத பேதமற்ற இனிய சூரியனே!
உன்கதிர்கள் இல்லாமல் உலகம் உய்யுமா?!
மின்னணுக்கள் பெருகுமா? மின்சாரந்தான் தோன்றுமா!
இயற்கை எழில்தருமா? இரவு பகல் வருமா!
வியக்கவைக்கும் விஞ்ஞானந்தான் வளருமா?
உன்கரங்கள் இல்லாமல் மல்லிகை பூக்குமா!
நின்கரங்கள் இல்லாமல் தாமரை விரியுமா!

பொங்கல் பழங்களென உனக்குச்சிலர் படைத்தாலும்
செங்கதிரோ மிகையானால் திட்டுங் குறைவதில்லை!
இருண்டதோர் அண்டத்தில் பிரகாசமற்ற
உருண்டை வடிவான சந்திரனைப் பார்த்தாயா?

சொந்த ஒளியுண்டா சுந்தர முகமுண்டா?
அந்த நாள் முதல் இந்த நாள் வரையும்
வெண்மதியே என்று கூறாத புலவருண்டா!
தண்மதியே என்றெழுதா எழுத்தாளருண்டா!

உன் தயவு இல்லாமல் சந்திரனுக்கேது ஒளி!
நின்தயவு இல்லாமல் நிலவேது பூமிக்கு?
மங்கையரைச் சந்திர வதனமென்றும் அவள்
அங்கமெல்லாம் திங்களன்ன ஒளியென்றும்
கூர்மதியால் கற்பனையால் கவியியற்றிப்
பார்வியக்கப் பலர் பாடிப் பொழிவதைப் பார்!
சந்திரனைப் போல் தன்னகத்தே சரக்கற்று
விந்தைபுரிந்து வாழும் வீணரும் அப்படித்தான்!

இலவசமாக கிடைப்பதை இலகுவில் பயன்படுத்தி
பலர்புகழ வாழும் சிலரைப் பார்த்தாயா?!
உன்னைப் போல் சுய விளம்பரமே செய்யாது
தன்னால் இயன்றதை இனத்துக்குப் புரிவோரைக்
கண்ணிமைப் பொழுதும் கருத்திற் கொள்ளாது
பண்ணும் விளம்பரத்தால் மனங்கள் தடுமாறிப்
பொய்யான மாயைகளைப் பார்த்துலகம் மயங்குதுபார்!
மெய்யான கடமையரைக் கருத்தெடுக்கத் தயங்குதுபார்!

# யாழ் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

சீர்மேவும் ஈழத் தமிழ் மண்ணில்
    சீமான் நாகமுத்து சித்தத்தில் உதித்து
பார்புகழும் யாழ்ப்பாண நன்னகரில்
    பொருந்திய ஆயிரத்துத் தொளாயிரத்தில்
சேர்ந்த பதின் மூன்றாம் ஆண்டுதனில்
    சுடர்வீசும் வைத்தீஸ்வரன் ஆலயத்தின்
தேர் ஓடும் வடக்கு வீதி அருகமைந்த
    தரம்மேவும் வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

உலகப் புகழ் ராமகிருஷ்ண மிசனின்
    உயர்ந்த நிர்வாகத்தில் ஆரம்பித்து
பலம் பெற்று பாரிற் பெருமை கொண்ட
    பல்லாயிரம் அறிஞரை உருவாக்கி
நலம் குன்றாவகையில் இன்றுவரை
    நிலையான பெயரோடு நிலைத்து நின்று
கலங்கரை விளக்காய்ப் பலருக்கு வழிகாட்டிக்
    கவரும் வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

திரளான மாணவர் பெற்றோர் முன்னே
தமிழோடு சைவ நெறி அறிந்த
வரலாற்றுப் புகழ்பெற்ற மாமேதைகள்
வந்து சொற்பொழிவுபல ஆற்றி
தரணியெங்கும் புகழ் மணம் வீசத்
தனிப் பெரும் திறமையைக் காட்டியதால்
வரமாக மக்கள் வாழ்வில் மதித்த யாழ்
வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

செந்தமிழும் ஆங்கிலமும் சீராகப் பயிற்றுவித்து
சைவச் சான்றோர்க்கு குருபூசை செய்து
எந்தச் சமூகமும் எம்மத மாகிலும்
ஏற்றத் தாழ்வின்றி அனைத்தையும் மதித்து
பந்தபாசமுடன் மாணவரை அணுகி
படிப்புடன் விளையாட்டும் பாங்குடனே பயிலவைத்து
சந்ததியொன்றைத் தமிழால் தளையிட் டிணைக்க
சிந்தித்த வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

வஞ்சியராயினும் வாலிபராயினும் வளாகத்தில்
விஞ்சாத அளவுக்குக் கட்டிக் காத்து
விஞ்ஞானம் கலைஞானம் வெவ்வேறாய் பயிற்றி
வையம் பெரும் புகழ் மேதைகளைத் தந்து
சஞ்சலத்தால் சிலர் புலம் பெயர்ந்து வாழினும்
சார்ந்த இனத்தையும் கல்லூரி நினைவையும்
நெஞ்சிற்தாங்கிச் சேவைகள் இன்றும் புரிய
நல்கிய வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

ஆராதனை செய்து அனைவரும் பூசிக்க
அலங்காரமாக விவேகானந்தா மண்டபத்தில்
பேரானந்தந்தரும் தில்லை நடராஜப் பெருமானின்
பொன்னொளி வீசும் திருவுருவச் சிலையும்
இராம கிருஷ்ணர் விபுலானந்தர் விவேகானந்தர்
இவற்றோடு சாரதா தேவியின் உருவப்படங்களும்
தீரா கவலைகளைத் தீர்க்க வல்லவையாய்த்
துலங்கும் வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

முத்தமிழும் ஆங்கிலமும் முறையோடு கற்றும்
மேன்மைகொள் சைவநீதியில் வாழ்ந்தும்
வித்தகர் பலரை உருவாக்கிக் காட்டி
விண்சென்ற முப்பெரும் மூர்த்திகளான
சுத்த மனங்கொண்ட அம்பிகைபாகன் வைரமுத்து
சீனிவாசகம் செம்மல்களால் உயர்ந்து
சித்திகள் ஆண்டாண்டும் பொங்கி வழிந்த
சீரான வைத்தீஸ்வராக் கல்லூரி வாழி!

ஆயிரத்தித் தொளாயிரத்தித் தொண்ணூற்றொன்பதில்
அமைந்த தமிழ் வைகாசி இருபத்திரெண்டில்
சேயினைப்போல் சீமையில் சீரார் உறுப்பினரால்
சிறந்த பழைய மாணவர் சங்க முருவாக்க
தாயினைப் போல் வந்து வாயார வாழ்த்தி
துணிவீந்த கல்லூரி ஆசிரியரும் இணைந்து
பாயிரம் பாடித் தொடக்கிய அரியசங்கத்தை
பெற்ற வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

களைப்படையாப் பழைய மாணவன் சீவரத்தினம்
கருத்திற் பூத்த அங்க உறுப்பினரோடு
இளைய தலைமுறையாய் வந்து இணைந்து
இங்கிலாந்து மண்ணில் வளர்ந்தோரும்
களைப்படையாது பல பயிற்சிகள் எடுத்து
சாதனைபுரியும் போட்டிகளில் பங்குபெறும்
விளையாட்டுக் கழகத்தைச் சீமையில் பெற்ற
வைரமுள்ள வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ!

கூடிய கல்வியைக் கற்க வந்தோரும்
காலத்தின் கோலத்தால் கடல்கடந்து வந்தோரும்
தேடி இணைந்து கல்லூரிப் பாசத்தால்
தரமான பெரும் பெரும் பணிகளாற்றி
நாடி நிற்கும் புனருத்தாரணங் களுக்காய்
நாளும் பொழுதும் நிதிசேர்த்து வைக்கும்
ஈடில்லா மாணவ மணிகளை வளர்த்த
ஈசனருள் வைத்தீஸ்வராக் கல்லூரி வாழீ வாழீ!

## தோள் கொடுத்து இணைய ஓடி வாருங்கள்

ஆதித் தமிழோடு ஆங்கிலமும் மிகப்பயின்று
நீதி ஒழுக்கம் சமத்துவம் பக்தியுடன்
ஓதிய கல்வியால் உயர் வளம்பெற்று
மேதினியில் மேன்மையுடன் திகழ்ந்து
சூழ்நிலையால் சீமை வந்து பரந்தெங்கும்

வாழ்ந்துவரும் வள்ளல்களே! தமிழ்ச் செம்மல்களே!
யாழ் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி இதயங்களே!
தோள் கொடுத்து இணைய ஓடி வாருங்கள்!
நாகமுத்து சர்வானந்தா விபுலானந்தா
விவேகானந்தா எனும் நாலு இல்லத்திலும்
ஏகமுடன் துணிந்து ஒன்று திரண்டு
தாகமுடன் தமிழொன்றாய் கூட வாருங்கள்!
உலகு போற்றும் விளையாட்டை நாமும் வளர்த்து
பலம்பெருக ஒற்றுமையாய் இனமும் காத்து
புலம்பெயர்ந் தாலுமெம் பண்பாடோங்க
நலம் பேணிப் பணிபுரிய நாடி வாருங்கள்!

# இலண்டன் தமிழ்ச்சங்கம் வாழியவே!



வந்த மக்களை வாழ வைத்து
வாட்டிடும் வேதனை தகர்த்தெறிந்து
செந்தமிழ் வளர்த்துச் சிறப்பாகச்
சேர்ந்த மக்களைத் தரமுயர்த்தி
எந்திர அசைவென எதிலுமே
என்றுஞ் சோர்வு அற்றிங்கே
நந்த வனத்திலோர் தடாகம்போல்
நாளும் பெரிதோங்கும் தமிழ்ச்சங்கம்!

பண்ணிசை தமிழில் பரப்பியிங்கே
பரதநாட்டியமும் பாங்குடனே பயில்வித்து
கண்ணிய மாந்தரைக் காத்திங்கே
கலையுங் கல்வியும் ஓங்க வைத்து

மண்ணின் மாண்புமே குன்றிடாமல்
மாதரணிகளும் வளர்த்திங்கே
புண்ணிய அறங்கள் பலபுரிந்தே
புகழுடன் பூரிக்கும் சங்கமிது!

சூழுமிந்தச் சிறார்களுமே சிணுங்கிடாமல்
சிறப்புடனே தீந்தமிழும் ஓதுவராம்!
வாழவந்த மாமணிகள் மகிழ்வெய்த
வாழும்வகை பலவும் செய்திடுமே!
பாழுமந்த அன்னியர் மோகந்தீரும்!
மாண்புமிக் கெம்பண்பும் வளருமப்பால்
வீழுமந்த விரும்பா வொழுக்கமுமே!
உரைத்திட்டேன் தமிழ்ச்சங்க சாதனையே!

புலம் பெயர்ந்த த்மிழர்களை
புரிந்தன்னார் வகைக் கேற்ப
நலம் காத்திங்கே நம்மினத்தின்
நாணயத்தைப் பெற்றிங்கே
பலம் கொண்ட சங்கமென
புனிதங் காத்தே யனுதினமும்
தலம் பெற்ற லண்டனிலே
திலகம் போலுமாஞ் சங்கமிது!

காந்தி மகான் முன்னிலையில்
கருத்தரித்த விச்சங்கம்
சாந்தி சக வாழ்வமைய
சபைகள் பல நிர்வகித்தே

நீந்திப் பலவிடர் கடந்து
நிலைத்து இன்றும் பெருமையுடன்
ஏந்திப் பலபணி புரிந்தே
ஏற்றம் பெற்ற தாமோ ரெழில்சங்கம்!

உள்ளூர்க் கலைஞரை ஊக்குவித்து
உரிய உதவிகள் பல கொடுத்து
உள்ளங் கவர்ந்த வெளியூர் வாழ்
உயர்ந்த கலைஞரை வரவேற்று
உள்ளங் குளிர அவர்களுக்கு
உயர்ந்த பட்டம் சூட்டி வரும்
வள்ளற் பண்பு குறையாது
வளரும் பெரிய சங்கமிது!

தேசமெங்கும் வாழ்கின்ற
தூய தமிழர் வந்திங்கே
நாசஞ்செய்யும் மதவெறியும்
நாட்டினப் பிரிவுகளும் விட்டெறிந்து
பாசமுடன் பழகியிங்கே
பைந்தமிழால் இணைபட்டு
வாசமலர் போல் மலருகின்ற
வையகம் புகழ் சங்கமிது!

உல்லாசச் சுற்றுலா ஒழுங்காக்கி
உள்நாடு அயல்நாடுகட்கு
சல்லாபம் செய்து சந்தோசமாய்
சிறப்புடைப் புதுப்புது இடஞ்சென்று

கல்லார் கற்றார் என்றற்று
கவலை நீங்கி ஆண்டாண்டும்
எல்லா மக்களும் கரங்கோர்த்து
இணைய வைக்கும் சங்கமிது!

வதிவிடத்தில் முடங்கி வாழும்
முதியோர் பலரை முடுக்கிவிட்டு
நிதியோ பொருளோ கேட்காமல்
நல்லுணவூட்டி சனிதோறும்
புதிய புதிய நண்பர்களைப்
புத்துணர்வோடு பழக வைக்கும்
மதியுடைத் திட்டம் பலவுள்ள
மாட்சிமை மிக்க சங்கமிது!

மாதர்க்கேற்ற வகுப்புகளும்
மேதினிபுகழும் கணணியுக
சாதனை புரியும் போதனையும்
சீராய் நடத்தி இலண்டனிலே
பூதலம் புகழ் தமிழ் விழாக்கள்
பல நடத்தும் இச்சங்கம்
நாதனருள் நன்கு பெற்று
நலமுடனே வாழியவே!

# யாரிவன்?!



வாசிகளைத் தேடித் தேடி உலகிலலைந்து
வளம்பெருக்கி வாழ்வதற்கே ஆசைப் படுகின்றான்!
ஆசிகூறி அனுப்பிவைத்த அன்னை தந்தையை
அடியோடு மறந்திடவும் முனைந்து வருகின்றான்!
ஓசியிலே கிடைப்பவற்றை உண்டு களித்து
ஒய்யாரமாய் வாழ்வதற்கே எண்ணங்கொள்கின்றான்!
பேசிப்பேசிக் காலத்தைக் கழித்துக் கொண்டாலும்
பணத்தைமட்டும் சேர்த்துப் பதுக்கிக் கொள்கின்றான்!

நாடு ஒன்று வேண்டுமென்று நாடிநின்றாலும்
நாட்டுக்கு இட்டுக் கூடிவாழத் தயங்குகின்றான்!
பாடுபட்டுப் பலவழியில் பணம் சேர்த்தாலும்
படிகேட்டுப் போவோர்க்கு பஞ்சமென்கின்றான்!
கோடுபோட்டுச் சுற்றத்தையே தூரத்தே வைத்து
காலமெல்லாம் கைவிரித்து இல்லையென்கின்றான்!

ஓடியாடி இரண்டுமூன்று வேலைகள் செய்து
  ஓய்வில்லாமல் ஏழுநாளும் அலைந்துதிரிகின்றான்!
நாடிவருந் தன்னினத்தை நயமுடனே வரவேற்று
  நல்லுதவி செய்யாமல் தட்டிக்கழிக்கின்றான்!
கூடிக்கூடிக் கோவில்களைக் கும்பிட்டாலுந்தன்
  குடும்பத்தையே உயர்த்திக்கொள்ளப் பாடுபடுகின்றான்!
ஆடிப்பாடி மதுவருந்தி இரவைப் போக்கி
  அதிகாலை கோவில் சென்று வேடம் செய்கின்றான்!

தாய்மொழியில் கதைப்பதற்குக் கூச்சங்கொண்டு
  தன்சந்ததியை மாற்றிட முயன்று வருகின்றான்!
வாய்த்த பெருமையுள்ள கலாச்சாரப் பண்புகளை
  வேண்டுமென்றே வாழ்வில் வீசி எறிகின்றான்!
காலைப்பிடித்துப் பதவி உயர்வுகள் பெற்று
  காண்பவர்க்கு அதுயெனது திறமையென்கின்றான்!
மேலைநாட்டு வதிவுடைமை கிடைத்தால் போதும்
  மேன்மைமிகு வாழ்க்கை அதுவேயென்கின்றான்!


அகதியாய் வந்தநிலை அறவே மறந்து
  ஆனந்த வாழ்வையே தேடித் திரிகின்றான்!
திகதி எப்போஎனப் புலம்பெயர்ந்த நாட்டுரிமைத்
  தகுதியையே எண்ணியெண்ணி அங்கலாய்க்கின்றான்!
கைப்பொம்மையாகக் கடைகளிலே வேலைசெய்து
  குறைந்தபட்ச ஊதியத்தை வாங்கி மகிழ்கின்றான்!
தைப்பொங்கல் தீபாவளி வருடப் பிறப்புத்
  தினம் எப்பொ தென்பதில் தர்க்கப்படுகின்றான்!

பெற்றதாய் தந்தையர் தேடிவந்தால் போதும்
பூட்டிய வீட்டுக்குள் வைத்து வதைக்கின்றான்!
சுற்றத்தைக் கைவிட்டு அன்னியரைத் தேடி
சேர்ந்து குடித்துப் பாடி யாடிக்கொள்கின்றான்!
புலம்பெயர்ந்து வந்து குடியிருந்த ஊரிலும்
பெருமையுள்ள ஊரைத்தேடி மாறிக் கொள்கின்றான்!
நலம்பேணி நல்லவையே செய்யும் வங்கிகளுக்கு
நாசமான வேலை செய்து நாட்டைக்கெடுக்கின்றான்!

கள்ளம் செய்து எதிலும் ஏமாற்றப் பழகிக்
களவான அத்தாட்சி தயாரித்துவெல்கின்றான்!
உள்ளம் புடம்போட்ட நல்ல மக்களையும்
களவுகள் செய்வதற்குத் தூண்டிவருகின்றான்!
இல்லத்தோடு சென்றிரவில் ஆடிப்பாடி
இளைய தலைமுறைக்கும் கேடுசெய்கின்றான்!
சொல்லுவ தென்றால் இன்னும் சொல்லலாம்
சத்தியமாய் யாரும் திருந்தப்போவதில்லை!

●

# உன்னுரிமை என்றும் உன் நாட்டில்தான்!



உன்னை நீயாண்டு ஊக்கமுடன் தொழிலாற்றி
உலகுக்கே உதாரணமாய் வாழ்ந்த தமிழினமே!
தன்னை வளர்த்துத் தனம்பெருக்கும் எண்ணமுடன்
தரணியெங்குமிப்போ தலைகுனிந்து வாழுவதேன்?!

பொன்பொருள் மனைகளைப் பிறநாட்டிற் சேர்த்துப்
பண்பு கலாச்சாரங்களைக் காற்றோடு போகவிட்டு
அன்னைத் தமிழை மெல்லமெல்ல மறந்து
ஆங்கில மோகத்தில் பேரானந்தங் கண்டு,

தன்னருஞ் சுற்றத்தின் தொடர்பினை அறுத்துத்
தாயக மண்ணின் சிந்தையைத் துறந்து
அன்னிய நாட்டில் வேரூன்ற நினைத்தால்
ஆபத்தேயன்றி ஆறறிவுள்ள செயலோ?!

உன்னரும் நாட்டில் உனக்குள்ள பெருமை
ஊர்தேசம் விட்டால் எங்குதான் கிடைக்கும்?
பன்னெடுங்காலம் பிறநாட்டில் வாழ்ந்து
பிரசா உரிமையைப் பதிந்து கொண்டாலுமுன்

பொருளாதாரத்தின் முன்னேற்ற வளர்ச்சியால்
புரட்சிகள் வெடிப்பின் நீ பரிதாபமே!
பொருள் பண்டம் மனைவாசல் அனைத்தும் இழந்து
பிற நாட்டில் மீண்டும் அகதியே ஆவாய்!

பரம்பரை மூன்றைப் பர்மாவில் தாண்டிய இந்தியர்
பாத நடையாய்த் தாய்நாட்டை அடைந்த
பரபரப்பான சரித்திரச் செய்தியை ஒருதரம்
பராசக்தி சினிமாவைப் பார்த்தால் புரியுமே!

உன்னதமாய் வாழ்ந்த பிறநாட்டு மக்களை
உகண்டாவில் இறுதியில் என்னதான் செய்தனர்?
அன்னியரென்ற காரணத்தால் அறிவற்று
அவலமாக்கி நாடு கடத்தினர் அல்லவா?!

தன்னலமற்ற எம்மினத் தியாகச் சுடர்களின்
தொண்டையும் துணிவையும் மனத்தால் மதித்து
உன்னுரிமை என்றும் தாய்நாட்டில்தான் என
உள்ளத்தில் நீயெண்ணி, வரும் சந்ததிக்கும்

தாய்த்திரு நாட்டின் தவப்பெரு எழிலையும்
தமிழ் மொழியோடு சுவைபட விளக்கி
வாய்த்த நேரத்தில் வாரிசுடன் தாயகம் திரும்பினால்
வையத்தில் இதைவிடப் பெருமை வேறுண்டோ?

●



# பச்சைக் கிளியே

பச்சைக் கிளியே உனக்கென்ன
பசித்தால் உண்ணப் பல இருக்கு!
கொச்சி மிளகைக் கடித்திடலாம்
கூலவகையுங் கொறித்திடலாம்!

இச்சை வந்தால் எவ்விடமும்
இடும்பையற்றுப் போய் வரலாம்!
முச்சந்திகளில் தடையுமில்லை
முகாங்களிலும் சோதனை யில்லை!

பிச்சை கேட்டுத் திரிவதுமில்லை!
பிள்ளைக ளுதவியை நாடுவதில்லை!
மெச்சத் தக்கநல் உடலழகும்,
மூளைப் பதிவும் உனக்குண்டு!

மூச்சை விரைவாய்ப் போகவைக்கும்
மதுப்பழக்கம் அறவே யில்லை!
ஏச்சுப் பேச்சில் சிலரைச் சாடி
எக்காள மிடும் குணமுமில்லை!

கூச்சமுள்ள கழுத் திருக்கு
கொவ்வைப்பழ வண்ண மூக்கிருக்கு!
பேச்சுச் சுதந்திரம் உனக்குண்டு
பாடச்சுதந்திரம் பகரவுந் தேவையோ!

மிச்சம் நீண்ட வாலிருக்கு
மானங்காக்க நகமிருக்கு!
உச்சமரத்திற் போய்க்கண்ணால்
ஊரைப்பார்க்கத் துணிவிருக்கு!

தச்சன் கட்டா வீடுனக்கு
தரணியெங்கும் நிறைந்திருக்கு!
இச்சை தீரச் சுற்றமுடன்
இனிதே பழக வாய்ப்பிருக்கு!

ஆச்சி அப்பன் சொத்தேது
ஆசைப்பட்டு அலைவதற்கு!
நீச்சலுடையில் தோன்றித் தோன்றி
நிதி சேர்க்க நினைப்பேது!


அச்ச மென்ப துனக்கில்லை
அடுத்துக் கெடுக்க எண்ணமில்லை!
பச்சைப் பசேல் உடலழகு
பார்வை விலகாக் கண்ணழகு!

உன்னிடம் எங்களுக்கோர் விண்ணப்பம்
உண்டுண்டு நீகேளாய் வஞ்சமிலோய்!
படுந்துயர் தாளாமலே புலம்பெயர்ந்தோம்
பாரினிலே எங்களுக்கோர் வாழ்விலையோ?

துச்சமாந்தர் ஆளுமீழ நாட்டினிலே
துயர்படுமோர் சிறுபான்மை யெங்களினம்!
மெச்சிடுமுன் அலகுகளால் எமக்கோர் சீட்டெடுத்தே
கச்சிதமாய்க் கூறுவாயோ சோசியமே?!

●

# புலம்பெயர்ந்த உள்ளங்களே!



உள்ளங்களே தமிழ் உள்ளங்களே!
உலகெங்கும் வாழும் உள்ளங்களே!
நெஞ்சங்களே அன்பு நெஞ்சங்களே!
உலகெங்கும் வாழும் நெஞ்சங்களே!

ஈழத் தமிழரை எண்ணுங்கள்
வாழ வழியங்கு செய்யுங்கள்!
மானம் காக்கப் புறப்பட்டு
ஈனப் படுவதைப் பாருங்கள்!

தோழமை கொண்ட பேரினம்
தாக்கி வருவதை நினையுங்கள்!
ஆள வந்த அரசுகள்
அழித்து மகிழ்வதை அறியுங்கள்!

வானமிருந்து எரிகுண்டு
வந்து வெடிப்பது வீட்டுக்குள்!
தான தருமத்தைக் கைவிட்டு
தீமைகள் புரியுது நாடுகள்!

தேனமுது என்று அரசுக்கு
சாமரம் வீசுது ஒரு கூட்டம்!
ஆனவரையிலும் போராடி
அடித்துக் கலைக்குது ஒரு கூட்டம்!

பதறிப் பதறிப் பசியினால்
பரிதவிக்குது ஒரு கூட்டம்!
சிதறிச் சிதறிச் செத்து
சிதைகளாகுது ஒரு கூட்டம்!

உண்ணும் உணவுப் பண்டங்கள்
எண்ணுமளவு அங்கில்லை!
மண்ணில் விளையும் அமுதங்கள்
மண்ணாய்ப் போகுது பேரழிவால்!

மருந்துப் பொருட்கள் வரத்தில்லை
அரும்பெரும் கல்வி அவல நிலை!
திருவிளக்கு அணைந்த கோவில்கள்
துருப்பிடித்த வாகனங்கள்!

வருவாய் இழந்த பொதுமக்கள்
உருக்குலைந்து வாடும் சமுதாயம்!
ஆடு மாடு கோழி நாய்கள்
பீடு உறைந்து தினமும் மரணம்!

நாடு விட்டு வந்து நன்மை பெற்றும்
சூடுசுரணையற்று வாழலாமா?
பருந்தாய் வரும் சிப்பாய்க்கு
பருவ மாதர் கோழிக் குஞ்சு!

சண்டாளப் பூனைகள் ஆட்சியிலே
சுண்டெலிகளாய் துன்பப்படும் நம்மினம்
கொண்ட கொள்கை உறுதியுடன்
எண்ணி ஏங்கித் தவிக்கிறது

அள்ளிக் கொடுப்பதும் கிள்ளிக் கொடுப்பதும்
வள்ளற் றன்மையைப் பொறுத்தது
எள்ளளவாயினும் சிந்தனை செய்தால்
உள்ளத்தில் உதிக்கும் இனப்பற்று!

●

# தமிழ் வெல்க!

*(பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் 4வது உலகளாவிய மாநாட்டில் பாடப்பெற்ற வாழ்த்துப் பா)*



இறைவனே எழுதி வரிவடிவமைத்து
முறையோடு தந்த முதுபெரும்மொழியாம்!
கறையற்ற தமிழினைச் சொரியும்
நிறைமிகு அறிஞரின் மாநாடு வாழிவாழி!

எம்மொழியுங்காணா எண்ணற்றப் படைப்பால்
செம்மையுற்றோங்கி நிற்கும் செந்தமிழில்
நம்பிக்கை கொண்ட உலகப் பெருமக்களாம்
எம்மினிய இதயங்களின் மாநாடு வாழிவாழி!

உழைப்பினாற் தமிழரை உலகிலுயர்த்த
களைப்பின்றிக் கன்னித் தமிழைப் பரப்ப
திளைத்தென்றுந் தமிழரொற்றுமை வளர்க்க
அழைத்த இம்மாநாடு வாழி வாழி!

பாரதத்தில் தலைமைப் பணிமனையேற்றுத்
தரணியெங்குங் கிளைகள் திகழ்ந்தாலும்
ஓரணியாகத் தமிழரையாக்க வழிகோலப்
பேரணிதிரட்டும் மாநாடு வாழி வாழி!

ஓதிய உயர் தமிழால் ஒப்பற்ற தமிழரெல்லாம்
சாதிமத பேதமற்றுச் சமத்துவமா யோரினமாய்
நீதிநெறி நின்று நாட்டுப் பிரிவுமற்று
மேதினிக்கு வழிசொல்லும் மாநாடு வாழி வாழி!

ஆக்கமாந்தமிழ் நூல்கள் அகிலஞ் செறித்து நல்
நோக்குடையாசான்மார் கலைஞர்களை யனுப்பி
ஊக்கமுடன் தமிழையும் இனத்தையுஞ் செவ்வனே
காக்கும் பணியக மாநாடு வாழி வாழி!

நலமே இனிது பெற்று நற்றமிழே வளர்த்துப்
புலம்பெயர்ந்த பன்னாட்டுத் தமிழரெல்லாம்
பலம்பெற்று வாழப் பலவழி சமைக்குங்
கலங்கரை விளக்கான மாநாடு வாழிவாழி!

தேடியொரு நாட்டிற் றிரவியஞ் சேர்த்தாலும்
ஓடியுழைத்து உயர்நிலை யடைந்தாலும்
ஈடில்லாத் தமிழ்ப் பண்பு கலாச்சாரம் பேணத்
தேடியுதவி நல்கும் மாநாடு வாழிவாழி!

தூங்காது சோராது தைரியமா யுழைத்து
பாங்காகப் பன்னாட்டுத் தமிழரைத் திரட்டி
நீங்காத திட்டங்கள் தரணிக் குணர்த்தும்
பாங்காக் மாநகர் மாநாடு வாழிவாழி!

தாய்நாட்டைப் பிரிந்து வாழுந் தமிழர்க்கு
ஆய்வுரை கேட்டுநல் அறிவினைப் பகர
வாய்ப்பினையளிக்கும் வையப்பெரும் புகழ்
தாய்லாந்து நாட்டின் மாநாடு வாழிவாழி!

வான்புகழோங்க வையகம் வாழ்த்துரைக்க
தேன் தமிழர் திரண்டு தமிழ்த்தாயை யுவப்பிக்க
மேன்மைமிகு பன்னாட்டுத் தமிழ்த் தமிழுறவு மன்றத்தின்
நான்காவது நேச மாநாடு வாழி வாழி!

சலசலப்புக்கஞ்சாது சரித்திரம் படைத்துக்
கலங்காது நின்று கணினியில் முன்னேறித்
துலங்கு நற்றமிழரின் பெருமைகள் பகரும்
உலகளாவிய மாநாடு வாழி வாழி!

# சிந்தனை செய் மனமே!



வெற்றியைக் கண்டுவியந்து கொள்ளாதே!
வேதனை வந்தால் வாடிச் சோராதே!
வெற்றியின் பின்னால் வேதனையும் வரலாம்!
வேதனையின் பின்னால் வெற்றியும் வரலாம்!

கற்றுவிட்டோமென்று கர்வங்கொள்ளாதே!
கற்காத கனவான்கள் பலருண்டு - பட்டம்
பெற்றுவிட்டோமென்று பெருமை கொள்ளாதே!
படிக்காத மேதைகள் பலருண்டே பாரில்!

மற்றோரை யென்றும் மாசுரைக்காதே
மனிதரேயானால் குறைகள்தான் இருக்கும்!
உற்றுன்னை நீயே சிந்தனை செய்தால்
உள்ளத்தில் தெரியும் ஆயிரம் வடுக்கள்!

முற்றுந்துறந்த முனிவராய்த் தெரியினும்
மனதுக்குள் இருப்பதை மனிதரோ அறியார்
குற்றம்புரிவதைத் தொழிலாகக் கொண்டோர்
கடவுளே கூறினுங் கவலை கொள்வாரோ!

கடவுளிலே அன்புவைப்போர் கருணையாளர்
காலமெல்லாம் அன்னார்க்கு அமைதியுண்டு!
கடவுளுக்கு மதமில்லை எவரும் ஒன்றே
கடவுளிலே விதம்பிரிப்போர் மதம்பிடித்தோரே!

ஈசனின் கற்பனைகள் ஏற்று நடப்போர்க்கு
ஈற்றில் முடிவிலா இன்பத்தையே கொடுக்கும்!
ஈசனைவைத்து ஏய்த்துப் பிழைப்போர்க்கு
ஈற்றில் முடிவுகள் இடும்பையைத்தான் கொடுக்கும்!

கடமையைச் செய்து கண்ணியங் காத்தால்
கடவுளே வருவாருன் குடிசையைத் தேடி
உடமையைப் பெருக்க ஏமாற்றத் துணிந்தால்
உள்ளதுங்கெட்டு வந்ததும் தேயும்!

ஆசைகள் வந்து ஆட்டிப் படைத்திட்டால்
ஆலய அமைதியும் ஆபத்தைத் தேடலாம்!
பூசைகள் கிரமந்தப்பாமல் புரிந்தாலும்
போகங்கற்று நடந்தால் இறையருள் தங்குமா?

பாடுபட்டுழைப்போரின் பணம் வருவாயெல்லாம்
பாசாங்கு செய்வோர்க்குப் பலன்களாய்ப் போவதா?
ஈடு இணையற்ற சனநாயக நாடுகளில்
ஏற்றத் தாழ்வுகள் இன்னும் இருப்பதா?

கடவுளென்ன ஒருவிளையாட்டுப் பிள்ளையா?
கருணையின் வடிவந்தான் பார்த்திருப்பாரா?
நடப்பதைத் திருத்தி கடந்ததை மறந்தால்
நீதியின் நிழலில் யாவரும் மகிழலாம்!

# தமிழீழத்தில் ஒரு உலா!



ஆண் ஆனையிறவுப் பாலத்திலே
ஆடிப்பாடிச் சுதந்திரமாய்
மானைப் போல ஓடிவந்த மச்சாளே!
மயக்கமென்ன மனதுக்குள்ளே கூறு!

பெண் கூவிப்பனைப் பழங்கள்ளு
குடத்தோடு குடித்தவன் போல்
தாவித்திரியும் அன்பு மச்சானே!
தயக்கமென்ன மனதுக்குள்ளே கூறு!

ஆண் மன்னார்க் கடல் மீனைப் போல - நீ
மின்னுகின்ற கண்ணழகி - உன்
வன்னிவிளாம் பழங்கள் ரெண்டு
வாட்டுதடி நெஞ்சுக்குள்ளே!

முல்லைத்தீவுக் காட்டுக்குள்ளே
மூடிவைத்த இருட்டைப் போல
சொல்லிவைத்து வளர்ந்ததோ கூந்தல் - உன்
சுருட்டையான அழகுக் கூந்தல்!

கசூறினாக் கடற்கரைச் சவுக்குப் போல
குளிர்ச்சியான நீண்ட கூந்தல்தான் - உனக்கு
பாசிக்குடாக் கடலலை போல் என்றும்
பதுமையான அமைதி உள்ளந்தான்!

கீரிமலைக் கேணிக்குள்ளே சென்று
குளித்துவிட்டு வந்தவள்போல் இன்று
பூரிப்பாக இருக்குனது மேனி - ஆகா
பூப்போல மலர்ந்திருக்கு எங்கும்!

**பெண்** மீசை அழகுக்காரா, மிடுக்கான கேசக்காரா!
மிச்சம் மீதி இருந்தால் நீ சொல்லு - நான்
ஆசை வைச்ச அன்பு மச்சான் நீதான்!
அறிவான ஆணழகா சொல்லு சொல்லு!

**ஆண்** மட்டுவில் மாம்பழமும் சோலைப் பலாப்பழமும்
மல்லாவி மண்விளைத்த மாதுளம்பழமும் - மக்கள்
இட்டு வாழும் திருநெல்வேலித்
தோட்டத்து வாழைப்பழமும் - எடுத்து

கோப்பாயூர்த் திராட்சைக்குலையோடு
கொடிகாமத் தேங்காய்ப் பாலுஞ் சேர்த்துப் பிசைந்து
வேப்பம் பூக்காலத்து வாகனேரித் தேனூற்று
வைத்திருக்குங் கலசந்தான் - நீ எனக்கு

**பெண்** வீரத்திலே சூரப்புலி நீதான் - உனக்கு
வவுனியா கருங்கல்லுக் கைகள்தான்!
காரத்திலே கைதடி மிளகாய் - நீ
கசந்து விட்டால் செம்மணி உப்பு!

தொண்டையாற்று றால் பொரிச்சு
திரியாப் பாரை சுட்டு வைச்சு
அண்டையூர் வல்லுவெட்டி விழலும் வாங்கி
ஆணங்கூட்டி சட்டியில் கொதிக்கவைச்சு

திருக்கோணமலையில் வாங்கிவந்து
தாட்டு வைத்த கணவாய் ஆக்கி பிரட்டி
பருவமான மயிலிட்டிச் சுறாவறுத்துக் கள்ளோடு
பூநகரிப் புழுங்கல் சோறுமிருக்கு!

**ஆண்** சிலாவத்துறை முத்துப் போலப் பல்லு
சிலாவுத்துத் தென்னையீர்க்குக் குறுக்கு
தலைமன்னார்ச் சங்குபோலக் கழுத்து - நாவில்
தோலைகட்டி நெல்லிரசச் சுரப்பு!

ஒட்டுசுட்டான் தேசிமஞ்சள் உடம்பு - உனக்கு
ஓமந்தைக் கொய்யாப்பழக் கதுப்பு - பேச்சு
மட்டுநகர் முந்திரிகைப் பருப்பு - பாட்டு
மாங்குளத்துத் தோடம்பழ இனிப்பு!

**பெண்** நாவற்குழி நாவற்பழக் கறுப்பா - உனக்கு
நாவாந்துறை நண்டுபோல விரல்கள்
அரியாலை ஈச்சம்பழ உதடு - நீ
மரியாதையுடன் மனைக்கு வா வா - உண்ண
மரியாதையுடன் மனைக்கு வா வா!

**ஆண்** நிலாவரைக் கிணற்று நீர்மட்டம் குறையலாம்
நிலாவே நான்கொண்ட நேசம் குறையாது!

**பெண்** கன்னியா வெந்நீர்க் கிணறுகள் ஆறலாம்
கண்ணா நான் கொண்ட காதல் ஆறாது!

# படைத்தவன்!



அவன் என்றும் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை
இவன் வானத்தின் கீழுள்ள ஊனினத்தைப் படைத்து
ஊரவைத்து நடக்கவைத்து ஓடவைத்து அவற்றில்
ஈரமற்ற எசமானைப்போல் காட்டி வருபவன்!

தேனீக்களை உருவாக்கித் தேசமெங்குந் திரியவைத்து
தேனீக்களால் கூடுகட்டி இனியதேனும் சேகரிக்கவைத்து
பணியொன்றும் புரியாத மானிடப் பிறவிகள் அதையணுகி
துணிவோடு எடுத்து அனுபவிக்க வைப்பவன்!

தன்னினத்தைப் பெருக்க ஆணும் பெண்ணுஞ் சேர்ந்து
துன்பப்பட்டு மரப் பொந்துகள் கிளைகளில் கூடுகட்டிப்
பறவையினம் இட்டுவைக்கும் முட்டைகளை ஊர்வதில்
சிறப்பான பாம்பினத்தை உண்டு களிக்கவைப்பவன்!

கோழிகள் அடைகாத்து வளர்த்த அருமைக்குஞ்சுகளை
ஊழியுள்ளவரை பருந்துக்கு உணவாக்கி ஊனேயிரையாய்
தேடும் புலிக்கும் சிங்கத்துக்கும் அதே காட்டில் பயத்தோடு
ஓடும் முயல்களையும் மான்களையும் இரையாக்குபவன்!

சின்னச் சின்னப் பூச்சிகளைப் பெரிய பூச்சிகள் தேடித்
தின்னவைத்தும் அவற்றைப்பின் வானில் சஞ்சரிக்கும்
பட்சிகள் பறந்து பாய்ந்து பிடித்து உண்ணவைத்தும்
பட்சமற்றுப் படைத்தவற்றை மோதவைத்தும் பார்ப்பவன்!

எலியினத்தை பூனைகளால் துரத்திக் கொல்வித்தும்
வலிய புலியினத்தால் மந்தைகளைப் பதறத்துடிக்க மடிவித்தும்
தரையிலும் தண்ணீரிலும் வாழவல்ல தேரைகளைப் பாம்புக்கு
இரையாக்கியும் மாறாது என்றென்றும் நடத்துபவன்!

கீரிக்குப் பாம்பைப் பகையாக்கி பாம்புக்குத் தவளையிரையாக்கி
மாரியில் நீர்நிலை மிகையாக்கி மீனினங்களைத் தொகையாக்கி
கோடையில் நீர்வற்றவற்ற கொக்குக்கும் நாரைக்கும் தீனாக்கி
கூடையில் மனிதரும் வடித்தள்ள ஆண்டாண்டும் வைப்பவன்!

சிலந்தியினத்துக்கு அற்புத பசையும் புத்தியுங் கொடுத்து
நிலத்தின்மேல் மூலைகளில் வலைபின்ன வைத்து இரை
தேடும் ஜெந்துக்களை அதில் சிக்கவும் செய்து பசியில்
வாடும் சிலந்திக்கு நல்ல உணவாக்கி வருபவன்!

கூறுபோட்டு மதத்தாலும் மொழியாலும் நிறத்தாலும்
ஆறு அறிவுச் சனங்களையும் ஆட்டிப் படைத்து
இனமென்றும் நாடென்றும் பிரிவினைகள் உருவாக்கி
அனர்த்தங்கள் யுத்தங்களால் அழித்தும் வருபவன்!

சிந்தித்துப் பார்த்தால் பாரின்படைப்பு அனைத்துமே
விந்தையிலும் விந்தையான சூக்குமப் படைப்புக்களே!
படைத்தவனை உணர்ந்ததாய்ப் பலர் கூறலாம், இப்பாரில்
படைத்தவனைக் கண்டவர் எவருமே இல்லை!

# இருட்டு



ஆந்தை ஆட்காட்டி கூகை வெளவால் இரைதேட
சாந்தமுள்ள மந்தையினம் உண்ட இரை மீட்க
உழைத்து உண்ட மக்கள் கண்ணயர்ந்து தூங்க
உழைக்காத மாந்தர் திட்டமிடும் நேரம் இருட்டு!

மீசை முறுக்கிப் பூனைகள் ஆணும் பெண்ணுமாய்
ஆசைதீர்க்க நீண்ட நேரம் சீறி உறுமிக் கத்த
தேடித்தேடி ஒரு கூட்டம் எலிகளை வேட்டையாட
ஓடியாடிச் சிலஎலிகள் வளைதோண்டும் நேரம் இருட்டு!

மல்லிகை மொட்டுக்கள் விரிந்து தென்றலுடன் கலக்க
வல்ல பெருங்கடல் அலைகள் பொங்கி மேலெழும்ப
பொன்னாய் வளர்ந்த நெற்பயிர்கள் அனைத்தும்
அன்னம் வாங்கிப் பருவம் பெறும் நேரம் இருட்டு!

வாழைமரங்கள் வேகமாய்க் குருத்து விட்டுவளர
காளைமாட்டை எண்ணியெண்ணி பசுவினங் கதற
ஊளையிடும் நரிக்கூட்டம் நண்டுபொந்தைத் தேட
தாளைமரப் பூக்கள் நறுமணம் வீசும் நேரம் இருட்டு!

மங்கையர் சிலர் மானத்தை விலை கூறிவிற்று
அங்கங்களைக் காட்டி நிதிசேர்க்கும் நேரம் இருட்டு!
அள்ளி இறைத்த பணத்தை மீட்கச் சினிமாப்படங்களை
வெள்ளித் திரைகளில் காட்டும் நேரம் இருட்டு!

சூதாட்டம் களியாட்டம் துள்ளாட்டங்களில் சிலர்
வாதாட்டமின்றிக் கேட்டதைக் கொடுத்து மகிழ்ந்தும்
மதுக்கடை கோழி மீன் பொரியல் கடைகளில்
பொதுவாகக் காலங் கடத்தும் நேரம் இருட்டு!

நாள்மாறுவதும் ஆண்டு மாறுவதும் ஒருவர் பிறந்த
நாள் தேடிவருவதும் ஒரு நூற்றாண்டு பிறப்பதும்
எண்ணற்ற நட்சத்திரங்கள் கண்ணுக்குத் தெரிவதும்
வண்ணமிகு சந்திரன் ஆளும் நேரமும் இருட்டு!

நாடுவிட்டு நாடு களவாகச் செல்லுஞ் சிலர்
பாடுபட்டு எல்லைகளைத் தாண்டும் நேரம் இருட்டு!
சுங்கவரி யில்லாமல் பொருட்களைக் கடத்துவோர்
தங்களுக்கு உகந்ததெனத் தேர்ந்த நேரம் இருட்டு!

கடலில் மீன்பிடிக்க மீனவர்கள் சென்ற பின்பு
நடந்து வந்து கதவைத் தட்டி ஆணில்லா வீடுகளில்
சுருட்டுப் பற்ற அரிக்கன்லாம்பைக் கேட்டுவாங்கி
சுருட்டையூதி எரிந்ததீயை நூற்கும் நேரம் இருட்டு!

கொள்ளிவால் பேயென்று பயமுறுத்தி ஊரைச் சிலர்
கொள்ளை யடிக்கச் செல்லும் நேரம் இருட்டு!
சத்தமின்றிக் கோழிகளைக் காட்டுப்பூனை ஓநாய்கள்
நித்திரையில் அமுக்கிப் பிடிக்கும் நேரம் இருட்டு!

நாட்டுக்குநாடு பகைப்பட்டு விமானத்தால் பொதுவாக
வேட்டுடன் குண்டுகள் போடும் நேரம் இருட்டு!
விடுதலை வீரர்கள் கூட்டாக முதற்சென்று தமக்கு
அடுக்காத முகாங்களைத் தாக்கும் நேரம் இருட்டு!

உலகத்தில் இது போல் உள்ளத்தில் மறையாத
பலவித கைங்கரியம் செய்கைகள் அனைத்துமே
இருட்டில்தான் நடக்கவேண்டி இருப்பதால் தானோ
உருண்டு தினம் பூமித்தாயும் சுழன்று வருகிறாள்!

சுறுசுறுப்பாய் வேலை செய்தும் சீரான ஊதியத்தை
பெறுதற்கு விடாது அதைச் சுரண்டும் மனங்களும்
கறுப்புப் பணங்களைச் சேர்த்துப் பூட்டிவைத்து
இறுமாப்புடன் திரியும் மனங்களும் மிக இருட்டு!

பலபல வழியிலும் பணம் பொருள் தேடிச்
சிலருக்கேனும் கொடுத்துதவ மனமின்றித்தன்
நலன் கருதியே வாழ்ந்து வரும் மாந்தர்மனம்
உலகத்து இருட்டிலும் கொடிய இருட்டு!



# நெஞ்சே, வேண்டு!

மக்களை மக்களாய் அரசெண்ணி ஆண்டு
மதியுள்ள திட்டங்களை நாட்டில் தூண்டி
மாண்புடைய கல்விநிலை மிக உயர வேண்டி
மனித நேயம் தழைத்திட வேண்டு!

மக்களின் அமைதிக்கு முதன்மை பூண்டு
மூண்டு வரும் பகைக்கு முடிவு கண்டு
அழிவுப் பாதைகளை அகற்றித் தாண்டி
ஆறறிவு அனைவர்க்கும் செயற்பட வேண்டு!

சம்பவம் பற்பல கழிந்துபோய் ஆண்டும்
சந்தோசங் கெடுக்கும் துன்பியல் ஈண்டும்
தேடித் தேடி அவற்றினைத் தோண்டும்
தரமற்ற எண்ணம் அழிந்திட வேண்டு!

ஆதிக்க வெறித்தனம் அனைத்தும் மாண்டு
அனைவர் மனத்திலும் அன்புள்ளம் நீண்டு
அனைவரும் நாட்டில் வயிறார உண்டு
அமைதி பெருக நெஞ்சே நீ வேண்டு!

# திறமை



மேசையில் பகிர்ந்த சீட்டுக்களைச் சேர்த்து எடுத்து
ஆசையுடன் அவற்றை யெல்லாம் ஒழுங்கு படுத்தி
அத்தனை நாட்டிலும் கண்டு வியக்கலாம்
புத்தியால் மற்றோரை விளையாடி வெற்றி காண்பதை!

படைத்தவனைக் கும்பிட்டு உடம்பை வருத்தாமல்
கிடைத்த சந்தர்ப்பத்தைத் தட்டியும் கழிக்காமல்
முயற்சியாலும் மூளையாலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப
உயர்வினை அடைந்தோரே உலகில் அனேகர்!

அன்றாடக் கடமைகளைச் செய்யாது கைவிட்டு
மன்றாடித் தேவைகளைக் கடவுளிடம் கேட்பதும்
பருவத்துக் கேற்ற இன்பங்களை இழப்பதும் பாரில்
பெருவாரியான மாந்தருக்குண்டு மாக்களுக்கில்லை!

வீழ்ச்சி வந்தாலும் விடாது மனம் தளராது
சூழ்ச்சி இல்லாமல் கிடைத்த சீட்டால் ஆடி
மற்றோரும் ஏற்க செயிப்பதுபோல் வாழ்விலும்
உற்றதை வைத்தே உயர்வது திறமை!



# பத்துக்குப் பதினைந்து!

அன்றொருநாள் நாட்டில் பாராளு
மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் மிக
நன்றான முறையில் ஒவ்வொரு நாளிலும்
குன்றாத வகையில் நடந்தது!

ஒரு பிரபல்யமான பட்டினத் தொகுதியில்
இரு வேட்பாளர் நானோ நீயோ எனப்
பெரும் போட்டாபோட்டி போட்டுக் கொண்டு
திருவிழாக் கோலமாய்த் தொகுதியை ஆக்கினர்!

நெருங்கி நெருங்கித் தேர்தல் தினமும்
அருகில் அருகில் வந்து சேரவே
இருவருக்கும் பயமும் செலவும் வர
உருண்டு மூளையும் விரைந்தது!

தேடுவாரற்ற மூலை முடுக்கு எல்லாம்
ஆடு கோழிகள் அறுக்கப்பட்டுத் தினமும்
வீடுவீடாகப் போத்தில் சாறிகள் கொடுபட்டும்
கேடுகள் கணக்கற்றும் நடந்ததுதான்!

வெண்கலச் சத்தத்தில் கோசங்கள் முழக்கி
கண்கவர் கொடியுடன் ஊர்வலங்கள் நடத்தி
விண்ணை நோக்கிய சிகரங்கள் நிறுத்தி
பண்ணிசை தப்பாது வசைகளும் பாடினர்!

அதில் ஒரு பின்தங்கிய பகுதி அங்கே
அதிக மக்கள் படிப்பறிவு குறைந்தும்
வதிவிடங்கள் ஒழுகியும் வாழ்ந்ததால்
நிதி கிடைத்தால் வாக்களிக்குங் கூட்டமது!

ஏட்டிக்குப் போட்டியாய்த் தேர்தலிருந்ததால்
கூட்டங்களைப் பார்த்துக் கணிப்பு எடுத்ததில்
மேட்டிமை கொண்ட இம்மக்களின் முடிவுதான்
ஈட்டி வெற்றியைக் கொடுக்கும் என்றனர்!

தேர்தல் தினத்துக்கு முதல் நாள் மிகப்புத்திக்
கூர்மையுள்ள வேட்பாளர் பின்தங்கிய இடத்துக்கு
ஊர்ச் சகாக்களைக் கூட்டியெடுத்து வாகனத்தில்
சீர்வரிசை சகிதம் சென்றடைந்தார்!


வேட்பாளரைக் கண்டதும் வாக்காளப் பொதுமக்கள்
கூட்டமாய் வந்து எதிரி அனைத்து வாக்குக்கும்
நோட்டுக்கள் பத்துவீதம் எடுத்து எடுத்து நமக்கு
நீட்ட நீட்டச் சம்மதித்து வாங்கினோம் என்றனர்!

புத்தியுள்ள அந்த வேட்பாளப் பெருந்தகையந்தப்
பத்துப் பத்துரூபா நோட்டுக்களை வாங்கிவிட்டு
அத்தனைக்கும் பதிலாய்ப் பதினைந்து கொடுக்க
உத்தரவு பிறப்பித்தார் தன் சகாக்களுக்கு!

சனங்களும் இம்முடிவை ஏகமுடன் ஏற்றுமுழு
மனதோடு பத்தைக்கொடுத்துப் பதினைந்தை வாங்கிக்
கனவானே கண்ணியனே ஐயாவே என வாழ்த்தி
உனக்கே அனைத்தும் தந்தோம் என்றனர்!

புத்தியுள்ள வேட்பாளர் ஈற்றில் வெற்றி பெற
பத்துக்கொடுத்த முதலாவதாள் தோல்விபெறத்
தித்திப்பான அனுபவம் அறிந்தோர்க்கு அந்தநாள்
சத்தியமாய் இருவரும் இன்று உயிரோடில்லை!

# யாழ்தேவியின் குமுறல்!



யாழ்நகரை நோக்கி புறப்பட்டுச் சென்றதால்
யாழ்தேவி என்ற நாமஞ் சூட்டப்பட்டு தமிழருடன்
சூழ்ந்த சுற்றம்போல் வாழ்வில் இணைந்தீற்றில்
மூழ்கிய துன்பத்தால் உடல்சிதைந்து ஆனவள் நான்!

விருப்பு வெறுப்பற்று அக்காலம் வாழ்ந்தோரை
உருக்கமுடன் ஏற்றி உல்லாசங் குன்றாவகையில்
வருமானமுடன் தினமும் காங்கேசன் துறைவரை
பெருநகர் கொழும்பிலிருந்து சென்றவள் நான்!

பகலவனைப் பார்த்து நேரங்கணித்த உழைப்பாளர்
உகந்ததம் அரைநேர முழுநேரக் கணிப்புக்களை
பகலவன் மந்தாரத்தில் மறைந்தாலும் என்னொலியால்
உகந்த கணிப்பெடுக்கச் சென்று வந்தவள் நான்!

புண்ணியவான்களையும் பாவியெனப்பட்டோரையும்
கண்ணியமுடன் ஏற்றிக் குறித்த இடம் இறக்கி
எண்ணற்ற மக்களின் இதயத்தில் பிடித்து அன்று
வண்ண வடிவமுடன் வாழ்ந்தவள் நான்!

பச்சை பசேலென்ற இயற்கை எழிலோடு உழைப்பில்
இச்சைகொண்டு சுறுசுறுப்பாய் இயங்கிய மக்களையும்
அச்சமற்று இருமருங்கும் நீராடும் பருவ மாதரையும்
நிச்சயம் பகல்முழுதும் காட்டிச் சென்றவள் நான்!

ஆடு மாடு எல்லாம் அவதிப்பட்டு ஓடவும் இரை
தேடும் பறவை எல்லாம் திகைத்துப் பறக்கவும்
காடு கரம்பை எல்லாம் கணீரென்று அதிரவும்
ஊடுருவி நாட்டுக்குள் சென்று வந்தவள் நான்!

அக்காலத்தில் விரைந்து படிப்பித்தாற்போதும் துவிச்
சக்கரவண்டி ஓட்டினால்போதும்; குறிப்பாக எதிலும்
எக்காரணங் கொண்டும் அவசரப்பட்டாற் போதும்
முக்கியமாய் என்பெயர் சூட்டியதைக் கேட்டவள் நான்!

இனமத பேதமற்று ஏற்றத் தாழ்வும் அற்று
தனவந்தர் ஏழையென்ற வர்க்கப் பாகுபாடற்று
மனமொத்த அவரவர் பிரயாணச் சீட்டுப் பிரகாரம்
சனங்களை ஏற்றியேற்றி மகிழ்ந்தவள் நான்!

சொல்லப்பட்ட நேரம் இயன்றவரை தப்பாது
நல்ல நோக்குடன் நாட்டுமக்கள் நலன்கருதி
அல்லும் பகலும் ஓயாது பணி புரிந்தன்று
எல்லார் சிந்தையிலும் புகுந்து விளங்கியவள் நான்!

அன்பான உறவினரை எதிர்பார்த்து மக்கஎெல்லாம்
என்சத்தங் கேட்டவுடன் பாதையோரம் ஓடிவந்து
புன்சிரிப்போடு உறவினர்க்குக் கைகாட்டக் கைகாட்ட
என்னையறியாமல் பூரிப்பு அடைந்தவள் நான்!

விடுமுறை நாட்கள் விழாக்கோலத் தினங்களண்டி
இடுக்கி இடுக்கி மக்களை ஏற்றிச் சென்று
அடுக்கு அடுக்காக உறவுகளை இணைத்து விட்ட
கடுகதி வேகமுள்ள கலங்காத மங்கை நான்!

அன்னியோன்னியமாக அரவணைத்து உட்புகுந்து
கன்னித் தமிழரின் கலாச்சாரத்தில் கலந்து அன்று
தன்னிச்சையாகவே எனக்கோர் தனியிடம் பெற்று
பின்னிப் பிணைந்து வாழ்ந்தவள் நான்!

முக்கனியுடன் பனாட்டன்ன பனம் பண்டங்களும்
செக்கச்சிவந்த றம்புட்டான் மங்குஸ்தான் அன்னாசிகளும்
அக்கம் பக்கம் என்னுடம்பில் மணக்க மணக்க
உக்கிர வேகமுடன் சென்று வந்தவள் நான்!

துங்கத் தமிழரின் கதிர்காம யாத்திரைக்கும்
சிங்கள மக்களின் நயினைதீவு யாத்திரைக்கும்
தங்கு தடையின்றி நல்லுதவி புரிந்தன்று
நங்கை நம்பியரின் காதலையும் வளர்த்தவள் நான்!

அடுக்கடுக்காய் நன்மைகள் எத்தனை செய்தாலும்
அடுக்காத ஒரு தீச்செயலைச் செய்து விட்டால்
இடுக்கண் வருவது உறுதி என்பதற்கு நல்ல
எடுத்துக்காட்டாக இருப்பவளும் நான்!

கொலைக்கருவி தாங்கித் தமிழரைக் கொலை செய்து
விலையுயர் ஆபரணங்கள் திருடிய கூலிப்படையையும்
அலையலையாய்க் கூட்டித் திரிந்த குற்றத்தினால்
நிலைகுலைந்து தமிழீழத்தில் சிதறிப்போனவள் நான்!

என்தீய கொடுஞ் செயலால் என் உடன்பிறவா
அன்புடைச் சகோதரி உத்தரதேவி நாமத்தாளும்
துன்பக்கடலில் மூழ்கி ஆட்டோட்டம் இழந்ததை
என் நெஞ்சில் எண்ணியெண்ணித் தவிப்பவள் நான்!

பாலங்கள் சீரழிந்து என்பாதைகள் திருட்டுப்போய்
காலத்தின் கோலத்தால் கண்கலங்கிக் கத்துமென்
ஓலக் குமுறல்களைத் தேற்றுதற்கு யார்தானிங்கே
நீலத் திரைவானே அனைத்துக்கும் நீயே சாட்சி!

●



# கைத்தொலைபேசி!

பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகள் கையிலும்
உள்ளத்தால் நேசிக்கும் நல்ல காதலர் கையிலும்
கொள்ளைத் தொழில் புரியும் கள்வர் கையிலும்
உள்ளதோர் சிறுகருவி கைத்தொலைபேசி!

அம்பலத்தில் ஆடும் அம்பலவாணனைத் தரிசிக்கும்
கும்பமேளாச் சுவாமிமார் கையிலும் ஊரெங்கும் திரிந்து
சம்பந்தமற்றுப் பேசி இரவில் நித்திரையைக் குழப்பும்
வம்புக்காரர் கையிலும் உள்ளது கைத்தொலைபேசி!

கரத்தில் கைத்தொலைபேசியை எப்போதும் வைத்து
சிரத்தையுடன் பேசி சாதனை படைப்போரும் உண்டு!
பரந்த இவ்வுலகில் பலதையும் விசாரித்து அறிந்து
தரமான முடிவுகளை எடுப்பாரும் உண்டு!

நல்ல முறையில் சந்தேகங்களை உடனே அறிந்து
கல்வியைத் தொலைபேசியால் வளர்ப்பாரும் உண்டு!
உல்லாசப் பிரயாணம் செல்லும் மாந்தர் வீட்டுடன்
சல்லாபம் புரிய எடுத்துச் செல்வாரும் உண்டு!

ஆழமான நித்திரையை அரைகுறையில் எழுப்பி
நீளமான உரையாடலை இது தொடக்கி விடும்!
வாழவேண்டி நல்ல பிள்ளைகளின் வருங்காலச்
சூழலை மாற்றி இது சீரற்ற நட்பையும் வளர்க்கலாம்!

போகாத இடங்களில் போய்ச் சிக்குப்பட்டால்
சாகாமல் பிழைக்கவும் தப்பவும் இது உதவும்!
ஆகாய விமானத்தில் பிரயாணஞ் செய்கையில்
ஆகாத விளைவுகள் ஏற்பட்டால் இது உதவும்!

பிரயாணம் செய்கையில் அலுவலகத்தில் இருக்கையில்
பரபரப்பை ஏற்படுத்தி மனநிலையை இது மாற்றும்!
சரசமாய்ப் பேசிச் சந்தோசமாய் இருக்கையில் ஒருவரை
சிரசில் அடித்து இது கத்தவும் வைக்கும்!

காதலை வளர்த்து ஆண் பெண்ணையும் இணைத்து
சாதனை புரிவித்து வாழவும் இது வைக்கும்! சிலரின்
காதலைப் பிரிக்கச் சந்தேகங்களை வளர்த்து முடிவில்
வேதனையில் ஆழ்த்தி வாழ்வையும் இது பிரிக்கும்!

நன்மைக்கு ஏதுவாயும் தீமைக்கு ஏதுவாயும் உலகில்
கன்னக்கோல் திருடர்க்கும் கருணையற்ற மூடருக்கும்
சொன்ன சொன்ன நேரத்தில் பக்குவமாய் உதவிப் பாரில்
தன்னால் இயன்றதெல்லாம் புரிவது கைத்தொலைபேசி!

உயர்தர நடுத்தர மக்களுடன் வியர்வை சிந்தியுலகில்
அயராது உழைக்கும் சகலரும் கதிர்த் தாக்கங்களால்
இயல்புமாறிப் புற்றுநோய் ஆபத்து வருமோ இல்லையோ
பயமற்று விரும்பிப் பாவிப்பது கைத்தொலைபேசி!

உற்பத்தி பெருகி உலகெங்கும் பரவி மக்களிடம்
பற்பல வண்ணத்தில் விதம்விதமாய் அளவுகளில்
விற்பனையும் நாளுக்கு நாள் அதிகரித்து மாந்தரை
அற்புதமாய் இணைத்து வருவது கைத்தொலைபேசி!

உடனுக்குடன் சம்பவங்கள் எங்கும் நடக்க நடக்க
உடன்பிறந்த இனத்தின் மாட்சிகளை அவ்வப்போ
சுடச்சுடச் சம்பந்தப்பட்ட மாந்தர்க்குத் தெரிவிப்பதில்
நடப்புலக முன்னணியில் திகழ்வது கைத்தொலைபேசி!

●



# காகம்

காகத்தின் நிறம்கறுப்பு அதன் குருதி சிகப்பு!
தாகத்துக்குத் தண்ணீரும் பசிக்கு உணவும்
காலை எழுந்தவுடன் தேடித்தேடி அலைந்து
மாலை வந்ததும் படுக்கை செல்லும் பறவை!

பள்ளிச் சிறாருணவைத் தந்திரமாய் பறித்துண்டும்
துள்ளிவரும் சிறுமீனைக் கௌவ்விக் கொத்தியும்
சின்ன குஞ்சுகளைப் பறந்து இறாஞ்சிப் பிடித்தும்
தின்னத் தனதாக்கி வாழ்ந்து வரும் பறவை!

மனிதர் வாழுமிடங்களில் தானுங்கூடி வாழ்ந்து
பனியிலும் மழையிலும் இரவில் கடுந்துன்புற்று
மனிதருண்ணும் உணவையே தானும் உண்டு
தனிமையற்றுச் சேர்ந்து பழகி வாழும் பறவை!

பார்த்த சிறு உணவையும் தானுண்ணும் முன்னர்
சேர்ந்த இனத்தையும் கூவியழைத்துப் பகிர்ந்துண்டு
இனத்தில் ஒன்றுக்கு ஒரு கெடுதல் நேர்ந்திட்டால்
மனங் கொதித்து வருந்திக் கரையும் பறவை!

கன்னத்தை விறாண்டிக் கொள்ளை யடித்தாலும்
தன்குஞ்சில் பிரியம்வைத்து தனிக்கவனஞ் செலுத்தி
உணவுப் பண்டங்களை மட்டும்தேடிச் சூறையடித்தாலும்
பணங்களையும் பொருட்களையும் ஏறெடுக்காப் பறவை!

சனிபகவான் தெய்வத்தின் வாகனமாகவும் அகத்திய
முனிவரின் கமண்டலங் கவிழ்த்துக் காவிரியாறோடப்
பிள்ளையார் எடுத்த புனித வேடமாகவும் இந்துக்களின்
உள்ளத்தில் என்றென்றும் பதிந்துள்ள பறவை!

விரதமிருக்கும் இந்து மக்கள் உபவாசம் முறிக்குமுன்
சிரத்தையுடன் தேடி விரதச்சோறு உண்ண வைத்து
மற்றப் பட்சிகளைப் போல் கொன்றுரித்துச் சாப்பிடாது
குற்றஞ் செய்தாலும் மனிதரால் மன்னிக்கப்படும் பறவை!

நாளும் பொழுதும் முற்றங்களில் காணுங்காரணத்தால்
வாழும் சிறுவர்க்கு நல்ல புத்திக் கூர்மையறிவூட்ட
வித்தாரமான பல கதைகள் புனையவும் அச்சிடவும்
உத்தியாக நம்முன்னோர் தேர்ந்தெடுத்த பறவை!

மனிதர் எறிந்த உணவுகளைத் தேடிவிரும்பி உண்டாலும்
மனிதர் வாழுமிடங்களில் உலாவித் திரிந்தாலும் மானிடக்
கண்கள் ஒருபோதும் காணாதவகையில் தம்மினம் பெருக்க
பெண்ணும் ஆணுமாய்ச் சேரும் வினோதப் பறவை!

புவனத்துப் பல்வகைப் பழங்களைக் கண்டு உண்டாலும்
கவனமுடன் விரும்பித் தேடிச் சர்வரோக நிவாரணியான
வேப்பமரத்துப் பழங்களையே அயனமண்டல நாடுகளில்
சாப்பிட்டுக் களித்து வாழ்ந்து வரும் பறவை!

வீட்டுக்கு ஒரு விருந்தினர் வருவதை முன்கூட்டியே
காட்டித்தரும் அளவுக்கு மனையருகில் வந்து கத்தி
சிறுவர் கோர்த்து அணியும் சலங்கை மணிகளையும்
சுறுசுறுப்பாய் சுமந்து வேடிக்கை காட்டும் பறவை!

மனுக்குலங் காணாப் புரிந்துணர்வு பகிர்ந்துண்ணல்
அனுதினம் முயற்சி தன்னுயிரில் இணையற்ற விழிப்பு
தன்னினத்தில் அற்புதபாசம் கொலைக்கருவிக்குப் பயம்
இன்னோரன்ன பலதுக்கும் ஒரே உதாரணப் பறவை!

தன்னைப்போல் உருவமுடன் தன்கூட்டில் முட்டையிடும்
இன்குரல் வளமுள்ள குயில் முட்டைகளையும் சேர்த்துத்
தன்குஞ்சாய் அடைகாத்து இரையூட்டி வளர்த்து வரும்
உன்னத பணியையும் தன்வாழ்வில் செய்யும் பறவை!

கட்டிடக் கலைஞர் மின்தாங்கி அமைப்பது போல் தன்
முட்டை குஞ்சுகளை இடி மின்னல் தாக்காது காக்கத்
தேடிப் பொருத்தமான சிறுலோகத்தை கூட்டிலிணைக்கும்
ஈடில்லா விஞ்ஞானத்தைப் பரம்பரையாய் கொண்ட பறவை!

காட்டிக் கொடுத்து இனத்தையழிக்கும் வீணர்க்கும் விலை
கூட்டிவிற்க உணவைப் பதுக்கும் கூட்டத்துக்கும் நாட்டில்
முயற்சியின்றிச் சோம்பேறிகளாய்த் தெருவில் திரிவோர்க்கும்
வியக்கவைக்கும் உதாரணமாய் வாழும் பறவை -காகம்!



# தமிழ் ஓலைகள் வாழ்க, வளர்க!

தகமையுள்ள வணிகர்களும் தரம்மிக்க கலைஞர்களும்
சுகந்தரும் நல்வைத்தியரும் உயர் மேதைகளும் சட்டம்
பகர்ந்து பெருமைபெறும் சட்டத்தரணிகளும் பார்புகழ்
மகத்துவ அறிஞர்களும் கணணிகற்ற ஆசான்களுடன்
நகரெங்கும் தமிழர் நலம்காக்கும் நல்ல மன்றங்களும்
அகமகிழத் தமிழருக்கு அழகான ஆலயங்களுங்கொண்ட
முகவரிகள் தாங்கி ஆண்டாண்டுந் தவறாது தமிழர்க்கே
உகந்ததெனக் கண்ட நற்தினமாம் சித்திரைப் புத்தாண்டில்
புகழுரையின்றி விளம்பரப் படுத்தி விநியோகம் செய்து
சகயினங்கள் வியக்கத் தமிழினத்தை மேம்படுத்தி வரும்
நிகரற்ற ஒரே பிரித்தானிய ஏடான தமிழ் ஓலைகள்
மிகப்புகழோடு மேதினியில் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

*(1994ல் எழுதிய வாழ்த்துக் கவிதை)*



# தீர்ப்பு

அவன் பெயரும் தெரியாது!
அவன் தம்பி பெயரும் தெரியாது!
அவன் தம்பி காதலிச்சான்,
அவன் சிறுவயதில் மணஞ்செய்தான்!

அப்பன் ஒரு குடிகாரன்!
அம்மா நல்ல தங்கம்மா!
அப்பாவுக்கும் வயதாச்சு!
அம்மாவுக்கும் வயதாச்சு!

வீட்டு வேலை அவன் தலையில்!
தோட்ட வேலை அவன் தலையில்!
பூட்டுப் போட்ட ஆளாக
மாட்டுப்பட்டு வாழ்ந்து வந்தான்!

மாறி மாறிக் காதலிச்சான்,
மங்கையரோ விரும்பவில்லை!
ஏறி ஏறி வயது போச்சு,
ஏக்கத்தாலே மனசும் போச்சு!

பாசமுள்ள நண்பனிடம்
மோசமான நிலையைச் சொன்னான்!
வேசமற்று ஆசைகளை
நேசமுடன் எடுத்துரைத்தான்!

சிகப்பு நிற வெளிச்ச வீடு!
சாலையோரம் இருக்கே என்று,
சகபாடி கூட்டிச் செல்ல,
சகவாசம் தொடங்கியாச்சு!

காலமும் போகப் போக
கனவீடு தெரிய லாச்சு!
கோலமும் மாறிப் போச்சு!
குடிவெறியும் தொடங்கியாச்சு!

நூறு நூறு ரூபா நோட்டு
மாறி மாறிப் போகலாச்சு!
காறித்துப்பும் அளவுக்கு
நாறிப் போச்சு அவன் வாழ்க்கை!

அப்பனுக்கும் தெரிய வந்து
அப்பட்டம் ஆகிப் போச்சு!
தப்பான பாதையெல்லாம்
துப்பறியத் தொடங்கியாச்சு!

தரகனிடம் அப்பன் சென்று
திருமணமும் நடத்தியாச்சு!
இரவொன்று மலர்ந்து வந்து
இன்பமுடன் விடிந்தாச்சு!

மாறாத பழந் நினைவில்,
நூறான நோட்டெடுத்து!
வேறொன்றும் நினைக்காது,
வீறாக நீட்டி விட்டான்!

குற்றமற்ற மங்கை போல
கொடுத்ததைப் பையிற் போட்டு
மற்றக்கையால் ஐம்பது ரூபா
மிச்சமென்று கொடுத்திட்டாளே!

சற்று நேரம் சென்ற பின்பு
சிந்தையெல்லாம் குழம்பலாச்சு!
உற்றதை எண்ணி எண்ணி
உள்ளமோ குமுறலாச்சு!

அரகரா அவன் வாழ்க்கை
தரகனால் பறி போயிற்று!
தரமான இத்தீர்ப்பை
கரகோசம் செய்யாதீர்!

*(என் நண்பன் சொன்ன உண்மைக் கதை)*

# விடிவெள்ளி பகர்கிறது!

சாகாமல் நெடுங்காலம் மின்னி மின்னி
ஆகாயத்தில் சஞ்சரித்து உலகைக் கவர்ந்து
காலை விடியுமுன் சிலமணி நேரத்தின்முன்
வேலைக்குப் போவோர்க்குக் கைகாட்டி

மீனவர் வாழ்க்கையில் ஆதிமுதலிணைந்து
வானத்தின் நிலைகளை முன்னமே அறிவித்து
பல்லாயிரம் மைல் உயரத்தில் இருந்து
நல்லதுங் கெட்டதும் கண்ணாரக் கண்டு

அன்றுமுதல் இன்றுவரை பாரிய யுத்தங்கள்
தொன்றுதொட்டு வளர்ந்துவரும் நாகரீகங்கள்
அத்தனையும் மனதுக்குள் புகுத்திவைத்து
சித்தத்திலிருந்து கூறும் விடிவெள்ளி நான்!

தேடிய செல்வம் நாடு மனைவியையும் பகடை
ஆடியிழந்து காடுசென்று வாழ்ந்து மீண்டும்
தேடி வந்து உபாயங்களால் போரிட்டு ஒருகூட்டம்
கூடிவாழ்ந்த சம்பவமே பாரதக் கதை!

ஒருவர் மனைவியை இன்னொருவர் தூக்கிச்செல்ல
பெரும்படை திரட்டி பலருடன் சென்று அங்கு
பொருதி இருபக்கமும் பலர்சாகத் தன்மனைவியைத்
திரும்ப அடைந்த ஸ்ரீராமகதையோ இராமாயணம்

மன்னவனாய் இருந்து திறைசெலுத்த மறுத்துத்
தன்படைகள் போரிற் தோற்க ஓடி மறைந்து
பின்பிடிபட்டு விளங்கித் தூக்கில் இடப்பட்டதே
தொன்றுதொட்டு வரும் கட்டபொம்மன் கதை!

அண்டை நாடுகளை ஆக்கிரமித்துத் தனதாக்க
சண்டைகள் புரிந்து ஈற்றில் தோல்வியைத் தழுவி
மண்டைக் கிறுக்கழிந்து சிறையாகி மருணித்த
பண்டையோன் வரலாறு நெப்போலியன் கதை!

சரித்திரத்தில் இடம் பெற்ற மன்னரெல்லாம்
பெரிய புகழ் பெருமை படைத்து நாட்டில்
உரித்தான பாடநூல்களிலும் இடம்பெற்று
மரித்தாலும் என்றும் பேசப்படுவது உண்மைதான்!

பாரத ராமாயண இரு பெரும் இதிகாசங்களிலும்
வீர காமச் சம்பவங்களால் வடித்த இலக்கியங்களை
சீராகக்கற்றுப் பிரசங்கித்து விமர்சனங்கள் எழுதி
தாரணியெங்கும் பலன் பெறுவோரும் உண்டுதான்!

இந்தச் சரித்திர நிகழ்ச்சிகளை மையமாய்க் கொண்டு
அந்தக்காலம் முதல் நாடகமாய்த் திரைப்படமாய் உலக
சந்து பொந்தெல்லாம் விளம்பரப்படுத்தி இன்றுவரை
சிந்தை மகிழ்வித்துப் பணமுழைப்போரும் உண்டுதான்!.

செப்பமுற இறுதிவரை போராடி மரியாதோர் களத்தில்
தப்பித்து ஒளிந்தோடி எதிரியிடம் சிக்கியோர் வாழ்வில்
அப்பப்போ தந்திரத்தை உபயோகித்தோர் போன்றோரை
ஒப்பற்ற வீரர்களாய்ப் பேசப்பட்டு வருவது உண்மைதான்!

சிலசில மன்னர் மந்திரிகள் தளபதிகள் பெயர்கள்
சிலசில நூல்கள் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டாலும்
பல போராட்ட வீரர்கள் தியாகிகளின் நாமங்கள்
உலகத்தில் பதியப்படாது மறைந்ததும் உண்மைதான்!

முற்காலப் புராண வரலாற்றுப் பதிவுகள் எழுதி
பிற்காலச் சந்ததிக்கு விட்டுச் சென்றோர் புகழ்
பெற்ற உயர் வர்க்கத்தையே மிக அலங்கரித்து
மற்றோரை அற்பமாய் விட்டது மா தவறே!

குறிதவறாது இலக்குவைத்து இறுதிவரை போராடி
வெறிகொண்டு எதிரிகளின் தளங்களைத் தகர்த்து
செறிந்த மகிழ்வுடன் சாவினைத் தழுவும் மாவீரரை
அறியாத உணர்வாளர் உலகிலெங்கும் இல்லை!

இழந்த மண்ணுக்காய் இனத்தின் விடிவுக்காய்
களத்தில் போராடி மடியும் தமிழீழ மாவீரர்களின்
அளப்பரிய தியாகத்தை நினைவுகூரும் பதிவுகள்
அழகான கல்லறைகளில் துலங்குதே தமிழீழத்தில்!

# பொங்கு தமிழே!



பொங்கு தமிழே, நித்தம் பொங்கு தமிழே!
எங்கும் நிறைந்து உலகில் பொங்கு தமிழே!
திங்களுஞ் சூரியனுந் தோன்றுமுன் உருவாக்கிச்
சங்கரனார் தந்ததென்று பொங்கு தமிழே!

கங்கை நதிநீர்போலக் காலமெல்லாம் பாய்ந்தோடி
வங்கக்கடல் அலைபோலப் பொங்கு தமிழே!
தாங்கிய திரவியங்கள் தரணியெங்கும் புகழ்பரப்ப
நீங்காது நிலைத்து நின்று பொங்கு தமிழே!

சங்கத்தில் சரமெடுத்து வீரத்தில் மணமெடுத்து
சாதனை பலகோடி இலக்கியத்தில் படைத்து வந்து
வந்தாரை வாழவைக்கும் பொங்கு தமிழே! என்றும்
சிந்தனையைத் தூண்டி நின்று பொங்கு தமிழே!

கொங்கு நாட்டுக் கரும்புச் சாற்றில்
கலந்து விட்ட தேனமுதாய் உனைப் பயில்வோர்
அங்கமெல்லாம் இன்பம் ஊறப் பொங்கு தமிழே!
அன்னியரை வசப்படுத்திப் பொங்கு தமிழே!

ஓங்கி நிற்கும் வானம்போல அழியாத இமயம்போல
தூங்காது எழுச்சி கொண்டு பொங்கு தமிழே!
வேங்கைபோல் வீரங்கொண்டு வீணரை வியக்கவைத்து
வெற்றிக்கொடி நாட்டி நின்று பொங்கு தமிழே!

மாங்கனிபோல் நாட்டினிலே மங்களமாயுனை வளர்க்க
ஏங்கி நிற்கும் இதயங்களை ஏற்றபடி வாழவைத்து
வெங்களத்தை முடிவுகட்டிப் பொங்கு தமிழே! என்றும்
மங்காப் புகழ் கொட்டிப் பொங்கு தமிழே!

# தைப் பொங்கல்



மனுக்குலத்தின் மாண்புக்கும் மங்களங்கள் அனைத்துக்கும்
அனுக்கிரகம் செய்து அண்டம் முழுதும் ஒளியூட்டி யுலகம்
எனும் உருண்டையில் வாழவைக்கும் உயிரூட்டும் சூரியன்
தனுராசிவிட்டு மகரராசிக்கு மாறுந்தினமே தைப் பொங்கல்!

இனமத சாதிகளுக்கும் கற்றவர் கல்லாதாரென்ற பிரிவுக்கும்
தனவந்தர் ஏழை என்ற வர்க்கங்களுக்கும் அப்பாற்பட்டுத்
தினமும் செயற்படும் கண்கண்ட பொதுத் தெய்வமாய்க் கருதி
கனம்பண்ணிச் சூரியனை வழிபடுந்தினமே தைப் பொங்கல்!

ஆலைகள் பல பெருகினாலும் சாலைகள் பல பெருகினாலும்
மூலை முடுக்கெல்லாம் விஞ்ஞானம் வளர்ந்து ஓங்கினாலும்
காலைமுதல் மாலைவரை எரித்துப் பயிர்வளர்க்கும் சூரியனுக்கு
ஓலைக் குடிசையரும் நன்றிசெய்யும் தினமே தைப் பொங்கல்!


நாடுவிட்டு நாடுவந்து நன்மை பெறும் மக்களெல்லாம் இன்றும்
பாடுபட்டு புலங்களில் வேலைசெய்து எமக்கு உணவனுப்பும்
ஈடு இணையற்ற விவசாயக் குடும்பங்களுக்கு உதவிகள் நல்கி
கூடுமானவரை நினைவுகூர வேண்டிய தினமே தைப் பொங்கல்!

# தை



தைலம் பூசி அரப்புத் தப்பி
தேய்த்து முழுகித் தூபமிட்டு
தைத்த நவநவ ஆடையுடுத்து
தமிழரெல்லாந் தமிழ் மணங்கமழ
தைலா திறந்து நகைபல எடுத்து
தம்மேனி யெங்கும் அலங்கரித்து
தையல ரெல்லாந் தாலியைத் தொழுது
திலகமிட்டுத் தீபங்களேற்றி
தையென தையெனத் தாலாட்டுப்பாடி
துயரமற்று மழலைகளோடு
தைரியத்துடனே தமிழ் மனையெங்கும்
தமிழால் யாவரும் ஒருப்படும்
தைத்திரு நாளாம் தமிழர் பொங்கலும்
தமிழீழ மண்ணில் தொடர்ந்து
தைப்பூசவிழாவும் புதிருண்ணுமின்பமும்
திகழுமோ விரைவில் தைமகளே!

# காலை மகள் வந்தாள்!



புல்லுகள் மேலுள்ள பனிப்படலம் உருக
பிள்ளைகள் எல்லாம் விழித்துப் பால் பருக

பாரிய இருட்டு சிறிது சிறிதாய் மறைய
பகலவன் வெப்பம் நாடெங்கும் நிறைய

பொங்கிய கடலலைகள் மீண்டும் சுருக
பட்சிகள் எழுந்து வயல்புலத்தை நெருக

பசுக் கூட்டங்கள் மடிகளில் பால் சொரிய
பொன்னான தாமரைகள் தடாகங்களில் விரிய

உழைக்கும் மக்களின் நடமாட்டம் பெருக
உயர்ந்த மரங்களின் பனித்துளிகள் உருக

நிறநிறப் பூக்கள் கொத்துக் கொத்தாய் மலர
நிறைந்த மலர்களின் நீர்த்துளிகள் உலர

காலை எனும் சோதிமகள் குளிரைப் போக்கி
காண வந்தாள் உலக மக்களை நோக்கி!

# மாலை மகள் வந்தாள்!



பூவினங்கள் ஊரெங்கும் பூத்து ஆட
ஆவினங்கள் படுத்து அசை போட


தென்றலுடன் தேனீக்கள் சென்று ஊட
தடாகங்களில் தாமரைகள் இதழ் மூட

மேய்ந்த மந்தையினம் பட்டிகளை நாட
மொய்யினங்கள் தங்கள் இருப்பில் கூட

சோலைக் குயிலினம் கூக்கூவெனப் பாட
சிட்டான புள்ளினங்கள் கூடுகளைத் தேட

செம்பவளச் சேவல்கள் ஒன்றையொன்று சாட
செங்கதிரோன் சற்றே மேற்குத்திசை ஓட

மீனவ மாதர் பிரிவை எண்ணி வாட
மாலைமகள் வந்தாள் இருளைச் சூட!



## தூக்கணாங் குருவி

எங்கும் திரிந்து எங்கும் பறந்து
தங்கும் மரங்களில் ஆறுதல் அடைந்து
மங்கும் மாலையில் மீண்டும் வந்து
தொங்குங் கூட்டினுள் உறங்குங்குருவி நான்!

காலை எழுந்து கனதூரம் சென்று
சோலையிலும் வெளிகளிலும் இரைதேடி
மாலை வந்து கூட்டினுள் நுழைந்து
மூலையில் உறங்குஞ் சிறிய குருவி நான்!

ஓய்வு விடுதலை நாளென்று இன்றி
ஆய்ந்து நன்னாள் கெடுநாள் அறியாது
வாய்த்த நேரத்தைப் பயன்பாடு ஆக்கி
நோய் நொடியற்று வாழுங் குருவி நான்!

விந்தையிலும் விந்தையாய் வடிவழகான
சொந்தக் கூடுகட்டி சீரான அறையமைத்து
சிந்தும் மழைநீரும் சுழலுங் கடுங்காற்றும்
குந்தகம் புரியாமல் உறங்குங்குருவி நான்!

ஆசையில்லை அச்சமில்லை ஆதலால்
காசைத்தேடிக் காரணமின்றிச் செலவிட்டு
பூசைகள் புரிந்து கும்பிட்டு எவரையும்
ஓசையுரக்கப் புகழாத குருவி நான்!

அவசரப்பட்டு அவசரப்பட்டு வாழ்வில்
உவப்பற்ற செயல்களில் உள்ளத்தை விட்டு
எவருக்கும் தீமை மனத்திலும் எண்ணாது
குவலயத்தில் வாழ்ந்து வருங் குருவி நான்!

அயராத உழைப்பை முதலாகக் கொண்டு
சுயமாக எதனையும் உணர்வோடு தேடி
நயநட்டம் எதிலும் பார்க்காது என்றென்றும்
இயற்கையுடன் சேர்ந்து வாழுங் குருவி நான்!

பதைத்துக் கருமங்களை மூடிவைக்காது
சிதைத்து இயற்கையை அழித்து வதந்திகளை
விதைத்து நாட்டைக் கெடுக்காது இனத்தை
வதைத்து இன்பம் தேடாத குருவி நான்!

கேடு செய்யும் தீயெண்ணம் அற்று
நீடு வானெல்லாம் பறந்து திரிந்து
ஈடு இணையற்ற சுதந்திர மனத்துடன்
பாடு பட்டுழைக்கும் குருவி நான்!

ஆதிமுதல் இன்றுவரை வாழ்வில்
நீதியற்ற அடக்குமுறை சிறைப்பிடிப்பு
நாதியற்ற நிலைக்குலைவு ஏதுமின்றி
போதிய மகிழ்வோடு வாழுங்குருவி நான்!

மத இன மொழி நில வெறிகள் அற்று
குதர்க்க முள்ள பேச்சுக்கள் அற்று
விதம் விதமான ஆடையணி களற்று
இதமாக இனத்தோடு வாழுங்குருவி நான்!

ஏமாற்றி உலகத்தில் பிழைப்பு நடத்தாது
நாமாக அனைத்தும் நமக்காக ஆற்றி
சீமானாக வாழ எண்ணாது இப்புவியில்
சாமானிய வாழ்வில் இன்புறுங் குருவி நான்!

ஆராய்ச்சி புரிந்து அழிவைத் தேடாது
கூரான சொண்டாலும் கால் நகத்தாலும்
சீரான சிறப்பான கருமங்களாற்றி வாழ்வு
பூராக நிம்மதியில் திளைக்கும் குருவி நான்!

தலைவரின்றி முதல்வரின்றி சண்டையின்றி
கொலைவெறி களவுபொய் மதுப்பழக்கமின்றி
அலைந்து திரிந்தாலும் அருடி வாழாமல்
நிலையான உறுதியுடன் வாழுங்குருவி நான்!

துன்புறுத்தி இனத்தைக் காட்டிக் கொடுக்காது
வன்முறை வாது பாலியல் வல்லுறவு புரியாது
மின்னல் வாழ்விலும் மதிகெட்டு நடக்காது
பொன் மனத்தோடு திரிந்துவருங் குருவி நான்!

போட்டி பொறாமை பெருமை அகங்காரம்
காட்டிக் கொடுக்குங் கயமைக் குணங்களின்றி
வாட்டி வதைக்கும் கொடிய மனங்களின்றி
ஈட்டிய அழகுடன் வாழுங் குருவி நான்!

கடன் கேட்காது கடன் கொடுக்காது
இடத்துக்கு இடம் குணம் மாறாது
கடவுளென்று கும்பிட்டு உதவி கேட்காது
உடனுக்குடன் கருமமாற்றும் குருவி நான்!

கோபப்படாது தெரிந்து பாவம் புரியாது
ஆபத்து வராமல் ஆராய்ந்து தொழிலாற்றி
சாபஞ் செய்யாது மற்றோரைச் சபிக்காது
சோபனங்களால் என்றும் சோராத குருவி நான்!

இறந்தாரை இகழ்ந்தோ புகழ்ந்தோ கூறாது
புறங்கூறி ஒருவர் பெருமைகள் சிதைக்காது
துறவியாய் மாறி ஆசைகளைப் பெருக்காது
மறக்காது கடமைகளையாற்றுங் குருவி நான்!

அண்டிக் கெடுக்காது அதிகாரஞ் செய்யாது
மிண்டிப் பகைக்காது முதுமையிலும் சோராது
தண்டித் திரியாது தோசங்களை நம்பாது
மண்டியிட்டுப் பிழைக்காது வாழுங்குருவி நான்!

நூறுவகை நீதிநூல்கள் கற்று உணர்ந்தும்
வேறுபட்ட கருத்துக்களால் பிரிந்துள்ள மானிடரே!
கூறுமென் குணத்தில் இயன்றதைக் கைக்கொண்டால்
பேறுடைப் பயன்கள் வாழ்வில் தேடிவரும் உமக்கே!

●



# ஆசைகள்

கஷ்டப்பட்டு உழைத்துச் சுற்றமுடன் நாட்டிற்சிலர்
கவலைகளை மறந்து வாழ்ந்து கொள்ள ஆசை!
நஷ்டமற்று விரும்பிய வியாபாரம் செய்துசிலர்
நயம் பெற்று எதிலும் சுகம் பெற ஆசை!
இஷ்டம்போல் வாழ்ந்து சேர்ந்தாரைக் கெடுத்துச்சிலர்
இன்னலுக்குள் அவர்களை மாட்டிவிட ஆசை!
துஷ்டராய் வாழ்ந்துசிலர் திருட்டுக்கள் புரிந்து
தரணியில் தம்பெயரைப் பதித்திட ஆசை!

காதலித்த பெண்ணுக்கே மாலை யிட்டாலுஞ்சிலர்
கனவாக ஒருவரையும் தேடிக்கொள்ள ஆசை!
பூதலத்தில் பணம் பதவி பெரிதென்று எண்ணிச்சிலர்
பொன்னான வாழ்வுகளை மாற்றிவிட ஆசை!
கூதலைக் கண்டு குளிர்காயும் போதெல்லாஞ்சிலர்
கிண்ணத்தில் மது இட்டு அருந்திட ஆசை!
சாதனை புரிந்து சரித்திரத்தில் இடம்பெற்றுச் சிலர்
சந்ததிக்கு புகழ்மாலை சூட்டிட ஆசை!

வங்கிகளை ஏமாற்றி கடன் பெற்றுச்சிலர்
வேறிடம் சென்று வாழ்ந்து கொள்ள ஆசை!
பங்கு முறைகளில் தொழில் நடத்திச் சிலர் பின்
பங்காளிகளை உதைத்துத் தள்ளிவிட ஆசை!
எங்கு சென்றாலும் உழைத்து உண்ணாதுசிலர்
ஏமாற்றித் தந்திரமாய் பிழைத்திட ஆசை!
அங்கங்களை அசைத்து நாட்டுக் குழைக்காத சிலர்
அங்கங்களைக் காட்டிப் பணஞ்சேர்க்க ஆசை!

மதங்களைப் போதிப்பதால் நல்வழிப் படுத்தாமற் சிலர்
மக்களின் மதிகளைத் திசைதிருப்ப ஆசை!
இதம்பதமற்ற குழப்பங்கள் ஏற்படுத்திச் சிலர் பாவ
இரத்தத்திற் சனத்தைக் குளிப்பாட்ட ஆசை!
அதர்மவழிக்கு இனங்களை வழி நடத்திச் சிலர்
அதிகாரத் தலைமைகளில் நிலைத்திட ஆசை!
முதன்மை பெறும் நாட்டையோ மக்களையோசிலர்
மதவெறிப் பிரச்சனையில் மாட்டிவிட ஆசை!

போரிட்டு நாட்டுக்காய் இனத்துக்காய்ச் சிலர்
பண்பான முறையில் மரித்திட ஆசை!
நேரிட்ட இன்னலைச் சாட்டாக்கிச் சிலர்
நெடுந்தூரஞ் சென்று வேற்று நாடுகளில்
ஆரிடர் வந்ததாய் ஆபத்து நேர்ந்ததாய்க் கூறி
அகதிகளாகிப் பெரும் உதவிகள் பெற்று
வேரிட்டு அங்கங்குதம் சந்ததியைப் பெருக்கி
வளத்தோடுஞ் சிறப்போடும் வாழ்ந்திட ஆசை!

பூசைகள் புரிந்து தானங்கள் செய்துசிலர்
புண்ணியத்தை வாழ்வில் சேர்த்திட ஆசை!
காசைச் செலவிட்டுக் குலாவிக் கூத்தாடிச் சிலர்
கவலையை மறந்து இன்புற ஆசை!
ஓசை நயத்தோடு துள்ளிசை பாடியேசிலர்
ஒருவரோ டொருவர் ஆடிட ஆசை!
ஆசைகள் மாந்தர்க்கு விதம் விதம் ஆனால்
அடுத்தோரை அவை தாக்கினால் தகுமோ!

●



# சிந்தித்தால்...

சூரியன் சந்திரன் சுற்றிவரும் புவனம்
பாரிய அண்டம் வளி வெளி உயிரினம்
அனைத்தும் படைத்த ஒருவருண்டென்று
நினைத்து மக்கள் நம்பி வாழ்ந்தாலும்
அந்த ஒருவர் யாரென்று குழப்புகின்ற
இந்த உலகத்து மயக்கமான போதனையால்
மதங்கள் மதங்களாய் மக்கள் பிரிந்து ஒரே
மதத்துள்ளும் பகையுணர்வு பிரிவுகள் ஏற்படுத்தி

பிரிவுகள் ஒவ்வொன்றுள்ளும் உட்பூசல் முற்றி
பரிவு சமாதானம் அனைத்தையும் மறந்து
ஒவ்வொரு மார்க்கமும் ஒன்றையொன்று மோதி
ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வோர் நாட்டிலும்
சக மார்க்கத்தாரைத் தாக்கியும் கொன்றும்
மகத்துவமான ஆலயங்களை இடித்தும்
நடந்து கொள்வதைப் பார்த்தால் நிசமாய்
கடவுள் ஒருவரா, அன்றிப் பலரா!

கடவுளுக்குக் கடவுள் போட்டியா!
கடவுளை வணங்குவோரில் போட்டியா!
ஒவ்வொரு சமயமும் சொல்லும்போது
வெவ்வேறு காலத்தில் மாந்தரில் புகுந்து
இறைவனே சொல்லி எழுதவைத்ததாய்த் திரு
மறை என்றும் வேதமென்றும் அவற்றைக்கூறி
பலவித கோணத்தில் ஆதாரங்களால் விளக்கிச்
சிலரைத் திசைதிருப்பி மனங்களைக் குழப்பி

தங்கள் மார்க்கமும் தங்கள் தேவனுந்தான்
உங்களை வாழ்விக்கும் என்று நம்பவைக்க
மக்கள் மதியற்று மாற்றாரைத் தாக்கிவிட்டு
எக்காலத்திலும் அது பிழையென எண்ணாது
தம்மிறைவன் இதை மகிழ்வுடன் ஏற்பாரென்றும்
இம்மைக்கு நல்வாழ்வும் மறுமைக்கு மோட்சமும்
தருவாரென்றும் அடிமனத்தில் திடங்கொண்டு
கருத்தற்றுச் சிலர் நாட்டைக் கெடுத்தால்....

உடந்தையாய் அவரவர் வேதமுங் கூறுமா!
இடத்தாலும் காலத்தாலும் வேதங்கள் மாறுமா!
இல்லை இல்லை இல்லவே இல்லை!
தொல்லை கொடுத்து மற்ற மதந்தாக்கும்
தரக்குறைவான செயல்களைத் தூண்டுவதும்
இரக்கமற்ற அரக்கத்தனங்களும் வேதங்களில் இல்லை.
காலத்துக்குக் காலம் கண்ணிய மாந்தரால்
சீலமுடன் மாந்தர் வாழச் சொல்லிய வார்த்தைகள்

ஒரு மார்க்கத்தின் கூட்டத்தைப் புண்படுத்துமா!
பெரும் தீய செயல்களுக்கு வழி வகுக்குமா!
முறையாக வேதங்களைக் கற்றும் உணராமல்
நிறைவாகக் கற்றோரிடங் கேட்டும் அறியாமல்
மதத்தை அரசியலில் கலக்கும் கூட்டத்தாரின்
இதம்பதமற்ற மதம் பிடித்த பேச்சுகளை நம்பும்
சுய புத்தியற்றோர்க்கு மூட நம்பிக்கையூட்டி
சுய லாபத்துக்காய்ப் பலியாக்கி இதுவரை

புத்தி மழுக்கப்பட்ட சிந்தையற்ற கூட்டத்தாரால்
யுத்தங்கள் அநேகம் மதத்தின் பெயராலும்!
கடவுளுக்கு மதமில்லை என்ற உண்மையும்
கடவுள் சகலர்க்கும் பொது என்பதும் புரியாது
மதத்திலுள்ள கடும்பற்றால் சிலர்தம் மதிகெட்டு
அதர்மம் அநியாயம் செய்யப் புறப்பட்டு உலகில்
எண்ணற்ற மனித பொருளாதார நாகரீக அழிவுகள்
கண்மூடித்தனமான சித்திரவதை கொலைகள்

இடத்துக்கிடம் அதுவும் கடவுளின் பெயரால்
தொடர்ந்து கொண்டே வருவதைச் சிந்தித்தால்
கடவுளை நம்பாது மனிதநேயத்தையே நம்பும்
திடமான மாந்தரால் பிரச்சனையே இல்லையே!
மதநம்பிக்கை மக்களைச் சீர்குலைக்க
சுதந்திரதாகம் புதுநாட்டை உருவாக்கும்
இறைவனை நம்புவதாய் மதங்களை நம்புவோர்
கறைபடிந்து முறைதவறி நடப்பதே வரலாறு!



MALAR PRINTERS 044-8224803